[illegible]

[illegible] [illegible] 4

[illegible] 1933

JL
J15m211,N33
N33.1-4
190344

91 ரிஜிஸ்டர் செ. எம். 2912

# ஆரம்பக்கல்வி
# ELEMENTARY EDUCATION



21 NOV 193

M A D R A

15 m 211,833
N33.1.4
190344

வில் வித்தை

By Courtesy of "Health"

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட இந்தியா, பர்மா, சிலோன், | ரூ. | 1 0 0 |
| வெளி நாடுகளுக்கு | ,, | 2 0 0 |

ஆரம்ப பாடசாலைவைத்து பரிபாலித்துவரும் ஆசிரிய மானேஜர்களிடமும், மானேஜர்களிடமும் 1-8-0 ரூபாய் விதம் சந்தா வசூலிக்கப்படும். ஒரு ரூபாய் பத்திரிகைக்குப்போக மிகுதியுள்ள 8-அணுவில் 4-அணுவை அந்தந்த ஜில்லாவிலுள்ள ரேஞ்சுச்சங்கங்களுக்கும், மற்றொரு 4-அணுவை சென்னையிலுள்ள ஆசிரிய மானேஜர்கள் மாகாண சங்கத்திற்கும் சேர்த்துவிடப்படும். இப்பத்திரிகைக்கு 1-8-0 ரூ. கொடுத்து சேர்ந்துவிடும் ஆசிரிய மானேஜர்களும், மானேஜர்களும், ஒருவருடம் வரையில் தங்கள் ரேஞ்சு சங்கத்தின் அங்கத்தினர்களாகவும், மாகாண சங்கத்தின் அங்கத்தினர்களாகவும், கருதப்படுவர். இவ்வித ஏற்பாடு ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் சரிவர நடக்கும் ரேஞ்சுகளில் தகுதியாக இருக்கும். அவ்வித சங்கங்கள் இல்லாத இடங்களில் ஆசிரிய மானேஜர்கள் மாகாண சங்கத்திற்கு 4 அணுவை மாத்திரம் சேர்த்து 1—4—0 அனுப்பிவிட்டால் மாகாண சங்கத்தில் அவ்வப்போது நடக்கும் நடவடிக்கைகளை தனிப்படையாக அனுப்பிவைக்கப்படும்.

## விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| முழுபக்கம் ஒருதடவைக்கு | ரூ. | 15 | 0 | 0 |
| அரை பக்கம் | ,, | 8 | 0 | 0 |
| கால் பக்கம் | ,, | 4 | 0 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்",
94-95, புதுத் தெரு, மண்ணடி மதராஸ்

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கடவுள் வணக்கம் .... .... | 125 |
| ஆரம்பாசிரியர்கள் அடிமைகளா? .... .... | 126 |
| செய்தித் திரட்டு .... | 129 |
| கோபால கிருஷ்ண கோகலேவின் ஜீவிய சரித்திரம் .... | 130 |
| தேசிய கவிச் சக்ரவர்த்தி .... .... | 133 |
| ஆரம்ப ஆசிரியர் சங்க நடவடிக்கைகள் .... .... | 135 |
| வீரப் பெண்மணிகள் .... .... | 141 |
| ஆசிரியர் பகுதி .... .... | 143 |
| [illegible]காரப் பகுதி .... .... | 147 |
| [illegible]த்திமைச் சங்கங்கள் .... .... | 149 |
| [illegible] ஒரு உபாத்தியாயரா? .... .... | 153 |
| [illegible] குமாரன் ஓர் இனிய தமிழ் நாடகம் .... | 157 |
| [illegible]ன்னை ஆரம்பக் கல்வி ஆக்ட் .... | 161 |


உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி


21 NOV 1933
MADRAS


சென்னை மாகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள் மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.


பத்திராதிபர்:— பி. வீரராகவன்


"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


மலர், 1. | ஸ்ரீமுக௵ ஆவணி, புரட்டாசி 1933௵ ஆகஸ்ட், செப்டம்பர் | இதழ்


## கடவுள் வணக்கம்.

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
ஆளினுங் கடன்மீ திலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர் எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதும்நான் நானெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே.

(தாயுமானவர்)

# ஆரம்பாசிரியர்கள் அடிமைகளா?

நமது தமிழ் நாட்டில் ஏறக்குறைய 20000 ஆரம்ப பாடசாலைகளும் 50000 ஆரம்பாசிரியர்களும் இருக்கின்றனர். இவ்வாரம்பாசிரியர்களுடைய சம்பள விஷயங்களையும் அவர்கள் உபாத்திமைத் தொழிலையும் கவனிக்கின்றபொழுது ஒரு காலத்தில் ஆப்பிரிகாவில் அடிமை வியாபாரத்தில் சிக்கிக்கிடந்த கேவலம் அடிமைகளைக் காட்டிலும் தாழ்ந்த நிலைமையில் இவ்வாரம்பாசிரியர்களுடைய நிலைமை தற்போது நம் நாட்டில் இருந்துவருகிறது. நமது தாய் நாடு சீக்கிரத்தில் சுவதந்திரம் பெற முட்டுக்கட்டையாக இருப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று இவ்வாரம்பாசிரியர்களுடைய தாழ்த்தப்பட்ட நிலைமை தற்போது முன்னேற்றமடைந்த தேசங்களின் சரித்திரங்களை வாசித்துப் பார்க்கின் அத்தேசங்களில் ஆரம்பாசிரியர்கள் எவ்வாறு சம்பாத்தியத்திலும், தொழில் முறையிலும், மேன்பாடடைந்து அத்தேச மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு சுகஜீவிகளாக வாழ்ந்து வருவது தெற்றென விளங்கும். உதாரணமாக அமெரிக்காவில் ஒரு ஆரம்பாசிரியனுடைய சம்பளம் ரூ. 200-க்கு குறையாமல் கிடைக்கின்றது. இங்கிலாந்தில் சுமார் ரூ 100-க்கு குறையாமல் கிடைக்கின்றது. ஆனால் நம் இந்தியாவிலே சராசரி கணக்கெடுத்துப்பார்த்தால் ஒரு ஆரம்பாசிரியனுக்கு 10 ரூபாயுங்கூட கிடைப்பதரிதாக இருக்கின்றது. இந்த சொற்ப சம்பளமுங் கூட அநேக உபாத்தியாயர்களுக்கு மாதா மாதம் சரியாக சம்பளம் கிடைக்க அரிதாக இருக்கின்றது.

ஒரு சமயம் மைசூரில் ஒரு உபாத்தியாயரும், அவரது மனைவியும், ஒரு குழந்தையுடன். ஜீவிப்பதற்கு சுமார் ரூ.23—8—0 ஆகிறதென்று கணக்கிட்டார்கள். இதைக் கண்டு மைசூர் டைரக்டர் திரு. சுப்பாறுவ் அவர்கள் ஆச்சரியப்பட்டவர்களாய் சில உபாத்தியாயர்களையழைத்து "ஐயா நீங்கள் மாதம் 15 ரூபாய் வீதம் சம்பளம் பெற்று எவ்வாறு ஜீவிக்கின்றீர்களென வினவினர். அதற்கு அவர்களில் சிலர் "ஐயா நாங்கள் வயிரார இரண்டு தரம் கடந்த ஒருவருடமாக புசித்தது கிடையாது என்றனர். சிலர் எங்களுடைய குடும்பச் சொத்துக்களை விற்று ஜீவிக்கின்றோம் என்றனர். சிலர் ஒழிந்த நேரங்களில் ஜாதகங்களை பார்த்தும் பரிசாரகன் வேலை செய்தும் பிழைக்கின்றோம் என்றனர். என்னே ஆரம்பாசிரியர்களுடைய நிலைமை. கேவலம் பரிசாரகன் வேலையிலும் கூட வருமை நோயால் ஆரம்பாசிரியர்கள் ஈடுபட்டதைப்பற்றி பெரிதும் வருந்துகின்றோம் இதனால் எவ்வளவு கேவல நிலைமையில் நம் நாட்டு ஆரம்பாசிரியர்கள் தவித்துக்கொண்டிருக்கின்றார்களென்பது நன்றாக விளங்குகின்றது. சம்பள விஷயங்களில் தான் இவ்வாறென்றால் நமது நாட்டில் ஆரம்பாசிரியர்கள் பொது மக்களாலும், பொதுஜன ஊழியர்களாலும், இதர அதிகாரவர்க்கத்தினர்களாலும், நன்று மதிக்கப்படுகின்றனராவென்று சற்று யோசித்துப் பார்ப்போம். ஆரம்பாசிரியர்களென்றால் பலர் கிள்ளுக்கீரையென மதிக்கின்றனர். அவர்களை தோட்டியைக் காட்டிலும் கேவலமாக அப்புறப்படுத்தி நடத்திவருகின்றனர். தோட்டிகளுக்காகிலும், இக்காலத்தில் ஒற்றுமையும், சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டு அதற்கென சில தலைவர்களும் வேலை செய்ய முன்வந்திருக்கின்றனர்.

காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலேவிற்குப் பிறகு எந்தத் தலைவரும், ஆரம்பாசிரியர்களுக்காக உழைத்ததாக எமக்குத்தெரியவில்லை. ஒரு சமயம் நான் ஒரு தாலூக்கா போர்ட்டு பிரசிடெண்டைப் பார்க்கப்போயிருந்தேன். என்னை அவர் கௌரமாகத்தான் வரவேற்றார். நானும் அவரும் ஒரே சோபாவில்



தான் உல்லாசமாக உட்கார்ந்துக் கொண்டு பல பொது விஷயங்களைப்பற்றியும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது ஒரு உபாத்தியாயர் வெகு தூரத்திலிருந்து பிரசிடெண்ட் அவர்களைக் காண வந்திருப்பதாக வேலைக்காரன் வந்து தெரிவித்தான். அதற்கு உடனே அவர் "அடே அந்த கம்மினாட்டிகளைப் போகச்சொல், இப்பொழுது பார்க்கமுடியாது. பொழுது விடிந்தால் இந்த வாத்தியார்கள் தொல்லை பெரிதாக இருக்கின்றது. இவர்களுக்கெல்லாம், அபராதம் போடச் சொல்லவேண்டும். என்பதாக கர்ஜித்த தொண்டையுடன் பேசினார். இதைக் கேட்டதும் என்மனதில் தோன்றிய கோபத்திற்கும், வருத்தத்திற்கும் அளவிட முடியாது. என்முகம் கருகருத்தது. உடனே நான் பிரசிடெண்ட் அவர்களை நோக்கி ஐயா ஏன் ஆரம்பாசிரியர்கள் மீது தங்களுக்கு இவ்வளவு கோபம்? என்பதாக மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு வினயமாகக் கேட்டேன். அதற்கு அவர் இந்த உபாத்தியாயர்கள் பாடசாலையில் சரியாகவே வேலை செய்வதில்லை. என்னேரம் பார்த்தாலும் சம்பளம் குறைவு குறைவு என்று கத்துகிறார்கள். போர்ட்டிலோ இந்த வருஷம் பணம் குறைந்துவிட்டது. அடிக்கடி தங்களுக்கு இஷ்டமான இடத்திற்கு மாற்றச் சொல்லுகின்றார்கள். மாற்றினாலோ எலெக்ஷனில் நமக்கு விரோதமாக வேலை செய்கிறார்கள். அதற்காகத்தான் இந்த உபாத்தியார்களை ஓரேயிடத்தில் வைப்பதில்லை என்பதாக யேதேதோ அனாவசியமான காரணங்களையெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தார். பிறகு நான் ஐயா, தாங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் தாங்கள் தற்போது வந்திருக்கும் உபாத்தியாயரை தங்கள் முன் அழைத்து சில விஷயங்களை கேட்க உத்தரவளிக்கவேண்டுமென்று கேட்டேன். அதற்கு அவர் அப்படியே செய்யுங்கள் என்றார். பிறகு அந்த உபாத்தியாயர் எண்ஜாண் உடம்பை ஒரு ஜாணாக வைத்துக்கொண்டு ஒரு குற்றவாளியைப்போல் நடுங்கி என் முன்வந்து நின்றார். அவரை வந்தகாரணம் என்னவென்று வினவ தன்னிடத்திலுள்ள ஒரு மனுவை கையில் கொடுத்தார். அதில் சில உபாத்தியாயர்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக டெப்பியுடேஷன் தங்கள் சங்கத்தின்மூலமாக அனுப்பப்பட்டதாகவும், அந்த டெப்பியுடேஷனை பார்க்க முடியாதென்பதாக பிரசிடெண்ட் அவர்கள் மறுத்தது மன்றி அவ்விதம் வந்ததற்காக பேருக்கு ரூ. 2 அபராதம்விதித்தது தர்மமாகாதென்றும் அந்த அபராதத்தை ரத்து செய்யும்படியாகவும் எழுதியிருந்தது. இதைப் பார்க்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிற்று நான் உடனே அவரை ஐயா நீங்களும் ஆரம்பாசிரியரிடத்தில்தான் முதல் முதல் அ ஆ என்ற அட்சரம் கற்றுக் கொண்டீர் அவர்கள் முதல் முதலில் குரு ஸ்தானத்திலிருக்கின்றார்கள், அவர்கள் எவ்வளவு தான் தாழ்ந்த சம்பளம் பெற்று தங்கள் ஆதிக்கத்தில் இருந்த போதிலும் தாங்கள் அவர்களை குரு என்ற முறையில் கௌரவிக்க வேண்டியது தங்களது கடமை, நாம் பிறருக்கு மரியாதை கொடுத்தால்தானே நமக்கு பிறர் மரியாதை கொடுப்பார்கள். இது உலக இயற்கை. மேலும் உபாத்தியாயர்கள் உலகத்திலுள்ள பல தொழில்களில் அதிக பொருப்பும், கௌரவமும், வாய்ந்தது ஆசிரியர் தொழில். ஆசிரியர்களே நம நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கியஸ்தர்கள். தற்போது நம் குழந்தைகள் இவ்வாரம்பாசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். ஆதலின் இவ்வாரம்பாசிரியர்களை நாம் இவ்வாறு தாழ்ந்த ஸ்திதியில் நடத்துவோமானால் எவ்வாறு நம் குழந்தைகள் நாளை தேசாபிமானிகளாகவும் செல்வந்தர்களாகவும், தியாக புருஷர்களாகவும், வீரச் சிங்கங்களாகவும் நம் நாட்டில் விளங்கப் போகின்றார்கள். தாங்கள் இவ்வுபாத்தியாயர்கள் குறையை கேட்காமல் விடுத்தது ஒரு பெரிய வருத்தமான விஷயம். அதிலும் அக்குறைகளை முறையிடுவதற்கு வந்ததற்காக அபராதம் விதித்தது மிகவும் வருத்தமானது. நாம் ஆதித்திராவிடர்களுக்கு சமத்துவம் வேண்டு

மென்று போராடும் இக்காலத்தில் நம் உபாத்தியாயர்களுக்கு சமத்துவம் கொடுத்து அவர்கள் குறையை நாம் நீக்காவிட்டால் யார் தான் அவர்கள் குறையை நீக்குவது, என்பதாக சில வார்த்தைகளைக் கூறினேன். அதற்கு ஒருவாறு இசைந்தவருய் எனக்கு ஒன்றும் தெரியாது ஹெட் கிளார்க் ஐயரவர்களை எல்லாம் விசாரித்து தங்களிஷ்டம்போல் உத்திரவு செய்கின்றேன் என்பதாக கூறினர். அவ்விதமே அவர் அபாரதங்களை யெல்லாம் ரத்துசெய்துவிட்டதைப்பற்றி நான் அவருக்கு எனது நன்றியறிதலை செலுத்த கடமைப் பட்டிருக்கின்றேன். இதைப்போன்ற விஷயங்கள் பல நடந்து வருகின்றன. எல்லா தாலூக்கா போர்ட் பிரசிடென்டுகள் இவ்வாறு செய்கின்றார்களென்பது எமது அபிப்பிராயமல்ல. ஏதோ சிலரே அறியாமையினுல் இவ்வாறு நடந்து கொள்ளுகின்றனர். இனியாவது தாலூக்கா போர்ட்டு மெம்பர்களும் இதர கல்வியிலாகா அதிகாரிகளும் இவ்வித தாழ்ந்த நிலையிலுள்ள உபாத்தியாயர்களை தங்களோடு சமத்துவமாக நடத்துவதல்லாமல் அவர்கள் பால் காருண்யமுள்ளவர்களாகி சம்பள விஷயங்களிலும் இதர விஷயங்களிலும் தாழ்த்தப்பட்டிருக்கும் ஆரம்பாசிரியர்களை ... ஆக்கி விடுவார்களாக.

ஓம்: தத்: சத்.

1903kk

## சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

பத்திரிகை அபிமானம் குன்றிய நமது நாட்டில் பத்திரிகைகள் நீண்ட நாள் உயிர் பெற்று வாழ்வது மிகக்கடினம், அதிலும் பணம் நெருக்கடியான இக்காலத்தில் பத்திரிகைகளின் நிலைமை சொல்லவேண்டியதில்லை. இது காரணமாகத்தான் நமது பத்திரிகையை முதல் முதலில் ஆரம்பித்தப் பொழுதே. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெளியிடுவதாக உத்தேசித்தோம். ஆனுல் சில சந்தா நேயர்கள் தாங்கள் அதிக முயற்சி எடுத்துக்கொண்டு அநேக சந்தாதாரர்களை சேர்த்து கொடுப்பதாக வாக்களித்து கடிதங்கள் மூலமாக வற்புரித்தனர். நாமும் அதற் கிணங்கி மாதா மாதம் வெளியிடுவதாக முயற்சித்தோம். சில ஆரம்பாசிரியர் சங்கங்களும் சந்தா நேயர்களை சேர்க்கும் விஷயத்தில் எடுத்துக்கொண்ட முயர்ச்சியைப்பற்றி நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். தற்போது மாதா மாதம் நடத்தக் கூடிய அவ்வளவு சந்தாதாரர்கள் சேராமையினுல் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தவராமல் வெளிவருமென்பதில் சந்தேக மில்லை. நமது தென்னுட்டில் ஏறக்குறைய சுமார் 20000 பாடசாலைகளும் 50000 உபாத்தியாயர்களும் இருக்கின்றனர் ஒவ்வொரு ஆரம்பாசிரியரும் சந்தாதாரர்களாக தாமும் சேருவதல்லாமல், இதர ஆசிரிய சகோதரர்களையும் "சந்தாதாரர்களாக சேர்க்க முன் வருவார்களானுல் நமது பத்திரிகை மாதம் ஒரு முறையல்ல இரு முறையுங்கூட குறைந்த சந்தாவில் வெளிவருமென்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு ஆரம்பா சிரியரும் முன்வருவார்களாக.

பத்திராதிபர்.

---

## ஸ்ரீமான் வி. ஜே. படேலின் தேக நிலைமை.

ஸ்ரீமான் வி. ஜே. படேலின் தேக நிலைமை இன்னும் கவலைக்கிடமாகவே இருக்கிறது. சென்ற திட்கட்கிழமை வந்த செய்தியில மூத்திரம் வெளியே வாராமல் ரத்தத்துடன் கலந்து விடுவதால், சிக்கலேற்பட்டிருப்பதாயும் அவர் உயிருக்கு மன்றுடிக் கொண்டிருப்பதாயும் ஆனுல் ஹிருதயம் சற்று அபிவிருத்தியடைந்திருப்பதால் நம்பிக்கைக்கு இடமுண்டென்றும் கூறப்பட்டிருந்தது. பலஹீனமான நிலைமையில் ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ், ஸ்ரீமான் படேலுக் கருகிலேயே இருந்து சிகிச்சை செய்ததால், அவருக்கும் தேக அசௌக்கிய மேற்பட்டு விட்டதாம்.

## செய்தித் திரட்டு

அமெரிக்காவில் பெரிய மண்ணெண்ணெய் வியாபாரியான வில்லியர் ஹார்ப்பர் தமது அருமையான கிளிக்காக எண்ணூறு பவுன் உயில் எழுதி வைத்திருக்கிருர். அதற்கு நல்ல புஷ்டியான ஆகாரம் கொடுக்க வேண்டுமென்றும் அதில் எழுதி யிருக்கிருர்.

* * *

மெக்சிகோவில் சென்ற 25-ந்தேதிபிரசண்டமாருதம் வீசியதாய் ஐயாயிரம் பேருக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டதுடன் இருபதினுயிரம் பேர் வீடுகளின்றி அவஸ்தைப்படுகின்றனர். பற்பல கட்டடங்கள் இடிந்து விழுந்துபோயின.

* * *

சென்ற 1933-ம் ஆண்டில் பர்மாவில் சுமார் இருபத்து நான்கு கோடியே எழுபது லட்சத்து ஐம்பதினுயிரம் காலன் மண் எண்ணெய் எடுக்கப்பட்டிருக்கிறது.

* * *

ஜினீவாவில் இப்போது தங்கியுள்ள, இந்தியா சட்ட சபை மாஜி தலைவர் ஸ்ரீ. படேலின் தேக நிலை கவலைக்கிடந்தருவதாகவே இருந்தாலும் பிழைக்க இன்னும் இடமிருப்பதாகவே வைத்தியர்கள் கருதுவதாகச் செய்தி எட்டுகிறது.

* * *

சிகாகோவில் நடக்கப்போகும் சர்வமத மகாநாட்டின் தலைமை வகிப்பதற்காக பரோடா மகாராஜா செல்லும் வழியில் கியூபெக் என்னுமிடத்தில் தங்கியபோது எல்லா மதங்களின் லட்சியமும் ஒன்றுதான் என்றும் சர்வ மதஸ்தர்களும் ஒத்துழைத்தால் மனித வர்க்கத்தின் க்ஷேமம் பெருகுமென்றும் அவர் கூறினராம்.

* * *

பக்ஸ் ரயில்வே ஸ்டேஷனில் போர்ட்டர் வேலை செய்து வரும் சிரில் காடரி என்பார் ஒரு தபால் முத்திரையை விட 30 மடங்கு சிறிய காகிதத்தில் அருமையான வீட்டை சித்திரம் வரைந்திருக்கிருர். இதை சாதாரண சிறு பிரஷைக் கொண்டே வரைந்தாரெனத் தெரிகிறது.

* * *

ரோமாபுரி நகரில் வசித்துவந்த செசாரே செக்ரி என்னும் ஒரு இத்தாலியர் 1799-ம் வருடத்திலேயே தீ குச்சு செய்யும் முறையைக் கண்டு பிடித்தாரென ஒரு இத்தாலியர் கூறுகிருர்.

* * *

ஒரு காகிதத்தில் நாம் மையைக் கொண்டு எழுதினுல் அது எவ்வளவு நேரத்திற்கு முன் எழுதப்பட்டதென்பதைத் துள்ளியமாக அறிந்து கொள்ளும் ஒரு நவீன முறையைக் கண்டு பிடித்திருக்கின்ருர்கள் இந்த முறையால் கொலைபாதகர்கள், குற்றவாளிகள் முதலியோரை எளிதில் கண்டு பிடிக்க சாதகமாக இருக்கிறது.

* * *

பிரிஸ்பேன் நகரவாசியான வில்லியம் பெல்டனர் 15 அடி படகொன்றில் உலகத்தைச் சுற்றிவர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர். தமது படகுடன், ஆகாரம் கொண்டு வருவதற்கு மற்றொரு படகையும் அவர் உபயோகித்துக் கொள்ளுவார் இச் சிறு படகில் அவர் அட்லாண்டிக் முதலிய பெரிய சமுத்திரங்களைக் கூட கடந்து செல்லத் துணிந்திருக்கிருர். அவர் திட்டப்படி சுமார் 50000 மைல் பிரயாணஞ் செய்ய உத்தேசித்திருக்கிருர். இந்த உலக யாத்திரையை முடிக்க சுமார் 5 அல்லது 6-வருடங்களாகக் கூடும்.

* * *

தீப்பெட்டியை முதன் முதலில் செய்தவர் ஜான் வாக்கர் என்னும் வெள்ளையரே. இவர் 1827-ம் வருடம் தீக்குச்சி செய்யும் முறையைக் கண்டுபிடித்தார். சுமார் 24 குச்சுகள் அடங்கிய ஒரு தீப்பெட்டி அக்காலத்தில் 1 ஷிலிங் அதாவது 12 அணு.

# கோபால கிருஷ்ண கோகலேவின்

## ஜீவிய சரித்திரம்.

1866—1915

(பாண்டுரெங்கன்—திருச்சி)

நமது தாய் நாட்டிற்கு கோகலே செய்த தொண்டுகளில் முக்கியமானவை இரண்டு. ஒன்று பாமர ரோயை நீக்க கட்டாய இலவசப் படிப்பை பரப்பவேண்டுமென்பது இரண்டாவது தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுடைய நிலைமை இதர ஆங்கிலர்களுக்கு சமமாக உயர்த்தப்படவேண்டுமென்பது. இந்தியா எளிமையான நாடாகையால் பெற்றோர்களுக்கு பணச் சிரமம் கொடுக்கலாகாது, பிள்ளைகளும் ஆரம்பக் கல்வி பயில வேண்டும். இவ்விரண்டு விஷயங்களையும் மனத்தில் வைத்துக்கொண்டு "நாடெங்கும் பாலர்கள் பணச் சிலவின்றிச் கட்டாயம் ஆரம்பக் கல்வி பயிலவேண்டும். இதற்குச் சர்க்கார் வசதிகள் ஏற்படுத்த ஆரம்பிக்கவேண்டும். இது விஷயத்தை யோசித்து ஒரு ரிபோர்ட்டுத் தயார்செய்ய உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும் கூடிய ஒரு கமிஷனைச் சர்க்கார் ஏற்படுத்த வேண்டும் "என்ற ஒரு தீர்மானத்தை இந்திய சட்ட சபையில் கோகலே கொண்டுவந்தார் இத்தீர்மானத்தை சென்னை கவர்ன்மெண்டார் தவிர இதர மாகாண கவர்ன்மெண்டார் ஆமோதிக்கவில்லை. சட்ட சபையிலும் பலருக்கு இதிலபிப்பிராயமில்லை. ஆகையால் இத்தீர்மானம் அடிக்கடி சட்டசபையில் கொண்டுவர கடைசியில் இவர் தீர்மானம் நிறைவேறிற்று.

ஆரம்பக் கல்வி அவசியமா? உலகில் எத்தேசங்களில் இது நடைபெற்று வருகிறது? இதனாலுண்டாகும் செலவுக்குப் பணம் எவ்வாறு கிடைக்கும்? இந்தியாவில் கட்டாய ஆரம்பக் கல்வி ஏற்படுத்துவது உசிதமா, இல்லையா? இவ் விஷயங்களை ஆராய்ச்சி செய்வோம். ஆரம்பக் கல்வி அவசியந்தான். நாகரிகப் பேற்றை அடைந்த நாடுகளெல்லாம். ஆரம்பக் கல்வியை அனுஷ்டித்து வருகின்றன. ஜர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான் முதலிய தேசங்களில் கட்டாய ஆரம்பக் கல்வி நடைபெற்று வருகிறது. இப்படியிருக்க, இந்தியாவுக்கு இஃது அவசியமில்லை எனச் சொல்லலாமா? ஆரம்பக் கல்வியில்லாவிடில், நமது சுகாதாரப் பிரசாரம் ஜனங்களிடம் பயன்படாது. கிராமங்களில் வியாதிகள் அதிகரித்து ஜனங்கள் அதிகமாய் மரண மடைவார்கள். ஆரம்பக் கல்வியில்லாவிடில், ஜனங்கள் தங்கள் உரிமை யின்னவென்றும், கடமையின்னவென்றும் அறியார்கள். ஜனங்கள், தங்களுரிமைகளையும் கடமைகளையும் அறிந்தாலல்லவோ, தற்காலத்தில் ஜன நாயக அரசியல் முறைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாவார்கள்? ஆரம்பக் கல்வியில்லாவிட்டால், ஜனங்கள் வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொண்டு, தங்கள் குடும்ப யோகக்ஷேமத்தைச் சிக்கனத்துடன் செய்துவர மாட்டார்கள்; இவ்வுலகில் பிறரால் எளிதில் மோசஞ் செய்யப்படுவார்கள்.

ஆரம்பக் கல்வி இல்லாவிடில், ஜனங்கள் தங்கள் அறிவை விருத்தி செய்யமுடியாது புத்தகங்களைப் படிக்கவும், அவற்றின் உபதேசங்களை அறிந்து, அவற்றின்படி நடக்கவும், ஆனந்த மனுபவிக்கவும் ஜனங்களால் முடியாது. ஜனங்கள் மேலான நிலைமைக்கு வருவதுந் துர்லபம். ஆகவே, குடும்ப சுகத்திற்கும் நாட்டின் க்ஷேமத்திற்கும் ஆரம்பக் கல்வி இன்றியமையாதது.

ஜனங்கட்கு ஆரம்பக் கல்வி கொடுத்து, அவர்கள் அஞ்ஞானத்தை நிவர்த்திப்பது இராஜாங்கத்தின் கடமையே. இதற்கே துரைத்தனத்தார் பணம் முதலில் மிகுத்து வைக்க வேண்டும். பணமில்லை யென்று சொல்வதுதகாது. 1854-ம் வருடம் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் இந்தியா கவர்ன்மெண்டாருக்குப் பின் வருமாறு எழுதினார்கள்.

"நம்மாலியன்ற மட்டும் இந்தியர்கட்கு அஞ்ஞான நிவிருத்தி செய்யச் சௌகரியங்களை யளிப்பது நமது கடமையாகும். இந்தியா இங்கிலாந்துடன் சேர்ந்திருப்பதன் பிரயோஜனம் இதுதான்...........இப்படிப்பினபிவிருத்திக்காக வெகு பணம் செலவு செய்யத் தயாரா யிருக்கிறோம்.

ஆகவே, இந்தியர்கட்குக் கல்விச் சாதனங்கள் ஏற்படுத்த வேண்டுவது இராஜாங்க தர்மமாயிற்று. பிற்காலம், ரிப்பன் பிரபு நியமித்த கமிஷனும் ஆரம்பக் கல்வியிலேயே கவர்ன்மெண்டார் பிரயத்தனங்கள் அதிகமா யிருக்க வேண்டுமென்று எழுதிற்று.

மேற் சொல்லப்பட்ட இரண்டு அறிக்கைகளினின்றும் ஆரம்பக் கல்வியை இராஜாங்கத்தார் தங்கள் கடமையென்று அங்கீகரித் திருக்கிறார்கள் என அறிகிறோம். ஆயினும், இந்நாட்டில் ஆரம்பக் கல்வி அதிகமாய் விருத்தியடைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. பிலிப்பைன் தீவுகளிலும், ஜப்பானிலும் அதி சீக்கிரமாய் ஆரம்பக் கல்வி பரவி விட்டது. இந்தியாவில் அவ்வாறு பரவாமலிருப்பதே கோகலே தீர்மானம் கொண்டு வந்ததற்குக் காரணம் எனச் சொல்ல வேண்டும்.

கோகலே கட்டாய ஆரம்பக் கல்வி வேண்டுமென்றார். இயன்ற மட்டும் ஏழை மாணவர்கட்குச் சம்பளமின்றிக் கல்வி கற்பிக்க வேண்டுமெனக் கூறினார். இங்கிலாந்திலுங்கூட 1870ம் வருடம் கட்டாயக் கல்விச் சட்டம் அமுலுக்கு வரவேண்டி யிருந்தது. ஆகையால், இந்தியாவில் கட்டாயச் சட்ட மிருந்தாலொழிய, ஜனங்கள் தங்கள் குழந்தைகளை• ஆரம்பக் கல்வி கற்கப் பாடசாலைகட்கு அனுப்புகிறதில்லை யென்பதை நாம் அறிகிறோம்.

கட்டாய வாரம்பக் கல்வி விஷயமாய்க் கோகலே சட்டசபை முன் கூறிய விஷயங்களை இங்கு எடுத்தெழுதுவோம்.



1. தாலூக்கா போர்டார், ஜில்லா போர்டார், முனிசிபாலிடி, தங்கள் தங்கள் விஸ்தீரணத்திற்குள் கட்டாயக் கல்வி ஆரம்பிக்க வேண்டும்.

2. முதலில் சிறுவர்களை மாத்திரம் இக்கட்டாயக் கல்வி ஆரம்பிக்க வேண்டும்.

3. ஆறுவயதிற்குமேல் 10-வயது வரையிலும் ஒவ்வோர் ஆண்பிள்ளையும் ஆரம்பக் கல்வி பயிலவேண்டும்.

4 சொற்பச் சம்பள முள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்குச்• சம்பளமின்றிக் கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும்.

5. இதனாலுண்டாகும் செலவைச் சர்க்காரும், லோகல் போர்டாரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

6. இந்தியா கவர்ன்மெண்டில் வித்தியாலாகாவிற்கு ஒரு காரியதரிசி பிரத்தியேகமாய் நியமிக்கப்படவேண்டும்.

7. கல்விச் செலவு இதுவரையிலும் மாகாணச் செலவா யிருந்தது. இந்தியா கவர்ன்மெண்டாரும் இனிமேல் பணஞ் செலவு செய்ய வேண்டும்.

8. வருஷாந்தத்தில் வரவு செலவுக் கணக்குப் படிக்கும் போது, பிரதி வருஷமும் கல்விலாகாச்செய்த வேலையைப் பற்றிக் கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிடவேண்டும்.

இவ் வாரம்பக் கல்வியை யேற்படுத்துவதாலுண்டாகும் செலவுக்குப் பணம் எவ்வாறு கிடைக்கும்?

1. வருஷாவருஷம் கஜானாவில் வந்து விழும் பணம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவ்வதிகப் பணத்தை வித்தியாபிவிருத்திக்குச் செலவிடலாம்.

2. அதிகப் பணம் செலவு செய்யும் இலாக்காக்களில் செலவைக் குறைக்கவேண்டும்.

3. இறக்குமதிச் சரக்குகளுக்கு வரி அதிகம் போடவேண்டும்.

4. சணல் முதலிய பொருள்களுக்கு ஏற்றுமதி வரிபோட வேண்டும்.

5. அவசியமானால், உப்பு வரியையும் அதிகப் படுத்தலாம்.

உலக பிரசித்தி பெற்ற
ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,

# பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் முதலிய வாடை கமழுகின்றன.
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,
புகையிலை கமிஷன் ஏஜெண்டுகள், அண்டு, பொடி வியாபாரிகள்,
2-21, பாரிஷ் வெங்கடாஜல ஐயர் தெருவு,
தபால் பெட்டி நெ. 189, சென்னை.

# சுயச் சந்தஜோதி தைலம்

இத்தைலத்தை மூளைக்கு சதா சூடேற்றிக் கொள்ளும் வித்வான்கள், வக்கீல்கள், ஜட்ஜிகள், பாடகர்கள், உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், எல்லோருக்கும் நல்ல குணத்தை தந்து ஓர் சிறந்த தோழனைப்போல் பக்கபெலனுண்டாக்கும் சக்தி வாய்ந்தது. மூளைக்கு நல்ல குளிர்ச்சியும் கண் ஒளியும் மயிர் வழ வழப்பும், சுகந்த வாசனையும், பித்தாதிக்ரத்தாலுண்டாகும், மயக்கம் கண் எரிவு புகைச்சல் காதில் நீர் தங்குதல் புடரிவலி இவைகள் போவதுடன், வியர்வையாலுண்டாகும் நாற்றங்கள் மூலச் சூடும் தணியும், சண்களிவிட்டால் வெள்ளெழுத்துமாறும், மயிர் நரை நீங்கும், ரொம்பவும் அனுபவம்.

எமது விலாசம்:—

ஜெனரோக, நிவாரண வைத்தியசாலை,
சித்த ஆயுர்வேத பண்டிட்,
எம். பாலசுந்தரம் பிள்ளை,
நெ. 24, ஜில்ஸ் தெருவு,
ஜி. டி. மதருஸ்.




# தேசிய கவிச் சக்ரவர்த்தி

(ஆர். எஸ்.)

தேசிய கவிச் சக்ரவர்த்தி எனப் பாரத மக்களால் போற்றப்படும் சுப்பிரமணிய பாரதியாரின் தினவிழா செப்டம்பர்மீ 11-ந் தேதி யன்று தமிழ் நாட்டினர் சிறப்பாகக் கொண்டாடினர். அவர் இம்மண்ணுலகைவிட்டு நீங்கிச் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்த இப்போதேனும் தமிழ் நாட்டு மக்கள் அவரது சிறப்பை உணர்ந்து கொள்ள முன்வந்தது ஒருவாறு திருப்தியையே அளிக்கின்றது. கவிச் சக்ரவர்த்தி என்னும் பெயர் அவருக்கே தகும். அவரது தேசிய கவிகள் மக்கள் உள்ளத்தில் தேசாபிமானத்தையும், சுயமதிப்பையும், சமதர்மக் கொள்கையையும் தோன்றச் செய்கின்றன. வங்காளத்தில் வந்தேமாதர கோஷம் வெளிப்பட்ட சமயம் பாரதியாரும் அதைப் பற்றிக்கொண்டு தமிழ் நாட்டிலேயே வந்தே மாதர உணர்ச்சியை ஊட்டினார். பாரதியார் 1882 ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் எட்டையாபுரத்தில் பிரபல பண்டிதராக இருந்த பிரம்மஸ்ரீ. சின்னஸ்வாமி ஐயரின் திருக்குமாரராக அவதரித்தார். அவர் குழந்தைப் பருவம் முதலே சொந்தமாகப் பாட்டுகள் பாடுவதிலும், கவிகள் அமைப்பதிலும் ஆர்வமும் ஆற்றலுமுடையவராக இருந்தார். அவரது தந்தை, தனயன் ஆங்கிலத்தில் பாண்டித்யம் பெறவேண்டுமென்னும் எண்ணத்துடன் திருநெல்வேலியிலுள்ள ஹிந்து கலாசாலையில் படிக்கவைத்தார். ஆனால் இளம்பாரதியாருக்கோ அதில் உற்சாகம் அதிகமாக இருக்கவில்லை. இதற்கிடையில் அவரது தந்தையாரும் காலஞ்சென்று விட்டதால் அவர் தமது படிப்பை நிறுத்திக் கொள்ளவேண்டியதாயிற்று. பிறகு அவர் 1904 ஆம் வருஷம் வரையில் எட்டையா புரத்திலேயே ராஜ தர்பாரில் வேலை செய்து வந்தார். பாரதியார் தமிழ் வித்வானாக இருந்தாரென்றாலும் அவருக்குப் பண்டைய தமிழ் பிடிக்கவில்லை. தமிழ் பாஷையிலும் இலக்கியத்திலும் ஒருவித புரட்சியை உண்டாக்கிப் புது முறையில் அதைக் கொண்டுவர விரும்பினார். அம்முயற்சியில் அவர் வெற்றிபெற்று விட்டார் என்பதில் ஐயமில்லை. அவரது வெற்றியைப் பண்டை வித்வான்களும் மறுப்பதற்கில்லை.

அதுமுதல் அவர் அரசியல் கிளர்ச்சியில் ஈடுபட்டுத் தேசியவாதியானார். பின்னர் அவர் சென்னைக்கு வந்ததும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுத் தேசியவாதியானார். பின்னர் அவர் சென்னைக்கு வந்ததும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு சேவை செய்யவேண்டியதாயிற்று. சொற்பகாலம் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராக இருந்தார் பிறகு தாமே சொந்தமாக இரண்டொரு பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்தினார். முதலில் அவர் தமது பாடல்களைத் தம் பத்திரிகைகளின் மூலமே வெளியிட்டார். அவரது பாடல்களின் வீரமும், எழுத்தின் திறமையும் கருத்தின் வேகமும் தமிழ்நாடெங்கும் பாவி இன்பத்தேன் பாய்ந்து மக்களைத் தட்டியெழுப்பின. காலஞ்சென்ற பெரியார் வ. வே. சுப்ரமணிய ஐயர் போன்ற உணர்ச்சி மிக்க நேயர்கள் அப்பத்திரிகைகளில் வியாசங்களை எழுதி வந்தனர். 1908 ஆம் வருஷத்தில் அரசாங்கத்தார் அடக்கு முறையைக் கையாண்டபோது தீவிரவாதிகளாயிருந்த பல தலைவர்கள் சிறைக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அப்போது பாரதியார் சென்னையிலிருந்து பத்திரிகையை நடத்த முடியா தென்பதை அறிந்து கொண்டு புதுவைக்குச் சென்று அங்கே அப்பத்திரிகையை நடத்தி வந்தார் அங்கு அவர் பத்து வருஷகாலம் இருந்தார் ஆயினும் வித்வான்களுக்கும், உண்மைத் தேச பக்தர்களுக்கும் சகஜமாகப் பற்றக் கூடிய வறுமை அவரைப் பிடித்து வாட்டியதால் அவர் மிக்க சிரமக்

துடன் காலங்கழித்து வந்தார். அவர் சொற்ப காலத்துக்குப்பின் சென்னைக்கு வந்து மீண்டும் மித்திரன் பத்திரிகாலயத்தில் வேலை செய்து வந்தபோது 1921 ஆம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் 11-ந்தேதி யன்று இறந்து விட்டார்.

காலஞ் சென்ற பாரதியார் வரகவியாவார். அவர் மிகப் பக்தியுடன் தொழுது வந்த அன்னை பராசக்தியின் துணையாலும் ஆதரவாலும் அவர் நினைத்தபோது நினைத்த கவிகளைப் பாடினார். அவர் தேசிய கவியாக இருந்ததுடன் பொருளாதார சமூகத் துறையிலும் பெரிய சீர்திருத்தக் காரராக விளங்கினார். மகாத்மாஜியின் பெருமையை அக் காலத்திலேயே உணர்ந்திருந்தார். உயர் குலத்தாரெனக் கருதப்படும் பிராமண சமூகத்தில் தோன்றியவராயினும் அவருக்கு ஜாதி பேதமென்பது கிடையாது. பிராமணனையும் ஆதிதிராவிடரையும் சமமாகவே கருதினார். 'தனி மனிதனுக்கு உணவில்லை யெனில், ஜகத்தினை அழித்திடுவோம்' என்று அவர் பாடியதானது அவரது சமதர்மக் கொள்கையை நிரூபிக்கின்றது. அவர் பாரத மாதாவையே தெய்வமாகக் கொண்டார். பாரத மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்பது அவரது துணிபு. அவரது பாடல்களில் தேசிய மணங் கமழுவதுடன் தமிழ் அபிவிருத்தியும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. அவரது பாடல்கள் தமிழ் பாஷைக்கே ஒருவித உயர்வையும் புத்துயிரையும் அளித்த தென்றும் கூறலாம். அவர் பாடல்கள் எப்படி தேசபக்தியைத் தூண்டுவனவோ அவ்வாறே பரிசுத்தமான சமயப் பற்றையும் தூண்டுவனவாக இருக்கின்றன. அதற்குக் காரணம் அவர் சக்தியைத் தொழுது வந்ததேயாகும். இப்போது மகாத்மாஜியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தீண்டாமை விலக்கைப் பற்றியும் அவர் அப்போதே தமது பாடல்களில் பிரஸ்தாபித்திருக்கிறார். இப்போது எந்தப் பொதுக் கூட்டங் கூடினாலும் பாரதியாரின் பாடல்களைப் பாடிய பின்னரே அக்கூட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. பற்பல பாடசாலைகளிலும் அப்பாடல்களைக் கற்பித்துக் கொடுக்கின்றனர் பாரதி பிரசுராலயத்தார் அவரது நூல்களைப் பிரசித்தப்படுத்த முன்வந்திருப்பதும் பாராட்டத்தக்கதே. வறுமையில் மூழ்கிக் கிடக்கும் அவரது குடும்பத்தார்க்கு உதவி செய்யவேண்டுவது தமிழ் மக்கள் கடமையாதலின் அவரது நூல்களையேனும் தமிழர்கள் பெருவாரியாக வாங்கினால் அக்குடும்பத்துக்கு உதவி செய்வதாகும்.

(ஆ. போ.)

---

## அரிசி மூளையின் வெற்றி

29-5-33-ல் வெளியான "சுதேசமித்திரனில் காந்தி அடிகள் 28-5-33-ல் இன்னும் 24 மணி நேரம் கஷ்டம் என்று சொன்னதாகவும் கடல் பஞ்சைக் கொண்டு உடலைத் துடைக்கும் ஸ்நானம் செய்துவைக்கக்கூட டாக்டர்கள் அனுமதிக்க வில்லை யென்றும், குமட்டல் பூர்த்தியாய் நிர்கவில்லை யென்றும் வெளியிடப் பட்டிருக்கிறது. இது உண்மையாயின் 12-5-33-ல் வெளியான "உழவுச் செல்வம்" 3-வது ப்ரசுரத்தில் உபவாச காலத்தில் உபயோகிக்கும் சோடாவால் உடல் கெட்டே தீரும் என்றும் டாக்டர்கள் தத்துவம் வெட்ட வெளிச்சமாகி நடுச் சந்திக்கு வர போகிற தென்றும் கூறப் பட்டிருக்கிறது. இதைப்படித்த பின்பாவது தமிழ் அபிமானிகள் தங்கள் நாகரீகத்தையும் அரிசி உணவை ஏற்ற நாயன்மார்கள், ஆழவார்கள் மூளையையும் கொண்டாடி சந்தோஷ பாராயிருக்கப் போகின்றார்களா? அல்லது மயக்கத்திலிருக்கப் போகின்றார்களா ? தொண்டில்லா உண்ணாவிரதம் கஷ்டத்தைக் கொடாமல் ஆரோக்யத்தை கொடுக்குமா ?

# ஆரம்ப ஆசிரியர் சங்கம்

## திருநெல்வேலி ரேஞ்சு

இச்சங்கத்தின் ஓர் பொதுக்கூட்டம் 2-8-33 மாலை 4-மணிக்கு பாளயங்கோட்டை நாற்றூண்டு மண்டபத்தில் சென்னை மாகாண ஆரம்பக்கல்வி அதிகாரியான டிப்டி டைரெக்டர் ஸ்ரீமான் தினபதி சதாசிவ செட்டியார் எம். ஏ. அவர்களை வரவேற்றுபசரித்து கனப்படுத்தக் கூடிற்று. அவ்வமயம் இச் ஜில்லா கல்வி அதிகாரியான ஸ்ரீமான் கெ. எஸ். அப்பாசாமி அய்யர் பி. ஏ., எல். டி. அவர்களும், ஸி. யம். ஸ்கூல் மானேஜரான ரெவரண்டு ஜி. டி. செல்வன் துரையவர்களும், இன்னும் பல சீமாட்டி சீமான்களும், உபாத்தியாயர் உபாத்தியாயினிகளும் ஆக சுமார் 500 பேருக்சதிகம் விஜயம் செய்திருந்தனர்.

ஆரம்பத்தில் கனம் செல்வன் துரையவர்களால் கனம் டிப்டி டைரைக்டர் அவர்கள் உபாத்தியாயர்பால் வரவேற்கப்பட்டு, சில உபசாரமொழிகள் கூறப்பட்டன. பின் ஆரம்பப் பள்ளிக்கூட மாணவர் மாணவிகளால் கும்மி, கோலாட்டம், சங்கீதம், நாடகம், டிரில் முதலியன நன்கு நடத்தப்பட்டன. பின் ஜில்லா டீச்சர் மானேஜர்ஸ் சார்பாக ஸ்ரீமான் என். பி. கிருஷ்ணய்யர் அவர்களும், ரேஞ்சு டீச்சர்ஸ், சார்பாக ஸ்ரீமான் டி. எ. எக்ஞமய்யர் அவர்களும் ஆங்கிலத்தில் கனம் டிப்டி டைரைக்டர் அவர்களுக்கு வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்து வழங்கினர்.

பின் ஷை பத்திரங்களுக்கு அவர்கள் பதிலளிக்கையில் ஷை பத்திரங்களுக்காக தாம் வந்தனம் அளிப்பதாகவும், ஆசிரிய மானேஜர்கள் ஜில்லாக் கல்விச் சபையில் அதிகப் பிரதிநிதத்துவம் வேண்டுமெனக் கேட்டிருப்பதின் சம்மந்தமாக சர்க்கார் ஷை விஷயத்தைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள் என்றும், இச் ஜில்லா சம்மந்தப்பட்ட வரையில் சமீபத்தில் ஆசிரியர் மானேஜர்களுக்கு 5 அல்லது 6 ஸ்தானங்கள் கிடைக்குமென்றும் சொன்னார்கள்.

பின் ஆரம்பக் கல்விக்கு சர்க்கார் உதவி செய்யும் விஷயமாகப் பேசுகையில் ஆரம்பக் கல்வியின் பொறுப்பு முழுவதும் சர்க்கார் பொறுப்பிலேயே வைத்துவிடாமல் பெற்றோர்களை அதிகமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அவர்கள் அப்படி ஏற்றுக் கொண்டதுபோக மீதிக்கே சர்க்கார் உதவி செய்வார்கள் என்றும் ஆரம்பக் கல்வியின் பூராச் செலவையும் எப்போதும் சர்க்காரே பொறுக்க வேண்டுமென்று நினைப்பது சரியல்ல வென்றும் கூறினார்கள். பின் முடிவாக அவர்கள் உபசாரப்பத்திரங்களில் குறைகளைப்பற்றி கூறியிருப்பது தமக்கு மிக்க சந்தோஷத்தைத் தருகிறதென்றும் சொன்னார்கள்.

பின் கடைசியாக கனம் டிப்டி டைரெக்டர் அவர்களுக்கு ரெவரண்டு செல்வன் துரை அவர்களாலும், ரேஞ்சு ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் வி. ரெகுநாதய்யர் பி. ஏ. எல். டி. அவர்களாலும் சில உபசார மொழிகள் சொல்லப்பட்டு பூமாலைகள் போடப்பட்டன. முடிவில் எல்லோராலும் ராஜவாழ்த்து கீதம் பாடப்பட்டு, மீட்டிங் இனிது நிறைவேறியது.

| | | |
|---|---|---|
| திருநெல்வேலி<br>2—8—33 | } | டி. எ. எக்ஞமய்யர்<br>காரியதரிசி |

---

## கீழையூர் ஆரம்ப ஆசிரியர் சங்கம்.

நாகபட்டணம் தாலூக்கா கீழையூர் சென்டர், ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்தின் 1933௵ ஆகஸ்டு மாதத்திய சாதாரணக் கூட்டம் 19-8-33ல் காலை 10-½ மணிக்கு கீழையூர் போர்டு பாடசாலைக் கட்டிடத்தில் திரு, ஆர். சம்பந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி.. அவர்களின் தலைமையின் கீழ் கூடி நடத்தப்பட்டது.

சென்ற கூட்டத்திற்குப் பின் வந்துள்ள சர்க்கார் உத்திரவும் 'ஆரம்பக்கல்வி'யெனும் மாத சஞ்சிகையும். வாசித்த பிறகு வோரங்கண்ணி ஸெண்டருக்கு அனுப்பப்பட்டது. இச்சஞ்சிகையைப்பற்றி நமக்கனுப்பியுள்ள கனம் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு இச்சங்கம் தனது மனமார்ந்த வந்தனத்தை மிகப்பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறது.

கீழையூர் போர்டு பாடசாலையில் ஆசிரியாயிருந்து நாளது மே மாதத்தில் விலகிய அண்டிரைண்டு எஸ். கலியாண சுந்தர முதலியார் பேரால் வசூலாக வேண்டிய ஜூன்—செப்டம்பர் சந்தா ரூ 0—2—0 இந்த இரண்டணாவையும் ஷை யார் வேலையிலில்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்ய இச்சங்கம் தீர்மானிக்கிறது.

ஆரம்பக் கல்வி' யென்னும் மாத சஞ்சிகையை மாதிரியாக அனுப்பிவைத்துக் கொண்டிருக்கும் அதன் கனம் பத்திராதிபருக்கு மிக்க வந்தனத்துடன் இச் சங்கம் ஏற்றுக் கொள்கிறது.

ஷை பத்திரிகையானது பரந்த நோக்கத்துடனும் சிறந்த பொருள்களுடனும் குறைந்த சந்தாவில் வெளிக்கிளம்பி யிருப்பதால் இது நீடூழி வாழ்கவும், இதன் சந்தாதார் பெருகவும் இதன் வெளியீடுகள் விரிந்திலங்கவும் இதன் பலனையேனைய ஆசிரியர்களும் அதிகாரிமார்களும் ஒருங்கே யனுபவித்து இன்புறவும் எல்லாம் வல்ல இறைவனை அருள் புரியுமாறு இச்சங்கம் பிரார்த்திக்கின்றது.

இச் சங்கத்தின் சார்பில் ஷை 'ஆரம்பக் கல்வியை ஒரு பிரதி வரவழைக்கவும் இதன் உறுப்பின ரெல்லோரும் குறைந்தது ஒரு பாடசாலைக் கொருவராவது இதன் சந்தாதாரராகச் சேரவேண்டுவது அவஸ்யமென்றும் இச்சங்கம் தீர்மானிக்கிறது:—

மாதிரிப்பாடம் 3-வது வகுப்பு கணிதம் இந்திய நாணய ஆரம்பம் தாதன் திருவாசல் போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் திரு வி. இராமசாமி வன்னியரால்:—

பாடம் நடத்தப்பட்டது.

ஷை பாடசம்மந்தமாய் அங்கத்தினர்களின் அபிப்பிராயமும் முடிவும் நடத்தப்பட்ட பாடத்தின் போதனு முறையில் பாடங்கொடுத்துள்ளவர் கையாண்டவழியின் திறமையையும் அதன் குறையையும் சீர்திருத்தத்தையும் எடுத்து கீழையூர் போர்டு பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு எஸ் சனகராமசாமி பிள்ளையால் சொல்லப்பட்டது.

பாடம் மிகவும் சுமார்

வியாசம் ஈகை தாதன் திருவாசல் போர்டு பாடசாலை உதவி ஆசிரியர் திரு முத்துசாமி நாயுடு அவர்களால்:—

வியாசம் வாசிக்கப்பட்டது.

வியாச சம்மந்தமாய் மெம்பர்களின் அபிப்ராயமும் முடியும் வாசிக்கப்பட்ட வியாசம் சுமாராயிருந்ததெனச் சொல்லலாம்.

எம். முருகையன் செட்டியார்
காரியதரிசி,


## சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினல் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே, .

## ஆதங்க நிக்ரஹக் மாத்ரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாது காக்கும். 32 மாத்ரைக ளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.

இனும்! இனும்!! இனும்!!!

" இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி "

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதருஸ்.




பொள்ளாச்சி தாலூக்கா கிராம ஆரம்ப ஆசிரிய சங்கத்தார்

ஷை ரேஞ்சு பாடசாலைகளின் டிப்டி இன்ஸ்பெக்டர்

மகா-ா-ஸ்ரீ

# இ. டி. பசுபதி பிள்ளை, பி. ஏ., எல். டி.

அவர்களுக்கு, வழங்கிய

# நலங் கருதிய நன்மொழி.

அன்புமிக்க ஐயா,

இந்த ரேஞ்சில் சென்ற நான்கு வருடகாலமாக ஆரம்பப் பாடசாலைகளின் அதிகாரியாக இருந்து, எங்கள் அனைவருடைய உள்ளத்தையும் நய மொழியாலும் நலம் புரிவாலும் கொள்ளை கொண்ட தங்களது பேரன்பில் கட்டுப்பட்ட நாங்கள், இன்று ஒன்றுகூடி தங்கள் பிரிவுக்கு ஆற்றாது உரைக்கும் மொழிகட்கு கருணைகூர்ந்து செவி சாய்ப்பீராக.

இறை அருள் கூட்டிவைக்க இந்த நான்கு ஆண்டுகளும், தாங்கள் எங்களிடையே தங்கள் தாளாண்மையை இனிதாற்றி வந்தீர்கள். நாங்கள் இருக்கும் ஊர்கள் தோறும் வந்து, எங்கள் பாற் கல்வி கற்ற இளைஞர்களை வினவி, அவர்களிறுக்கும் விடை முகத்தானும் பிறவாற்றானும் எங்களது கல்வி பயிற்றுமுறையை சீர்தூக்கி, நலங்காணில் நன்மொழி கூறி எம்மை மேன் மேலும் அத்தொழிலில் அம்முறையில் ஊக்கியும், நலத்துக்கு மாறுயது காணில் எம்மை எம்மனம் புண்படாவாறு தெருட்டி நல்வழியில் புகுத்தியும் போந்த, தங்களது செவ்விய இயல்பின் மாட்சியை, யாம் எங்ஙனம் புகழ்வோம்?

யாங்கள் திங்கடோறும் கூடும் திங்கட் கூட்டத்தில் தாங்கள் இயன்றவரை தவறாது வந்திருந்து, எங்கள் கூட்டத்தை ஒழுங்குபெற நடாத்திக்கொடுத்து, அப்போது எமது ஆசிரியத் தொழில் குறையின்றி நடை பெறுதற்குரிய வழி வகைகளை எடுத்துக்காட்டி எம் அனைவோரையும் திருத்தும் வகையால் கூறிப்போந்த விரிவுரைகட்கு யாம் யாது கைம்மாறு செய்யவல்லோம்!

"கைம்மாறு கவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மாலியலுதவி தான் செய்வர்"

என்ற மூதுரைக்கு ஏற்ற இலக்கியமாகவன்றோ தாங்கள் இருக்கின்றீர்கள்!

இந்நல்லியல்பொன்றே தங்களுக்கு செல்லுமிடந்தோறும் நின்று பயனுதவிக்கேடில் புகழ்நிறுவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தங்களது உயிர்நிலை, சீர்த்த அன்பின் செம்மைசேர் வழியது, என்று கூறிக்கூறி மகிழ்வோம்.

பொது நலமே பேணும் தூய உள்ளம்படைத்த தாங்கள், தங்கள் தாளாண்மையைச் செய்தற்பொருட்டு இங்கு எங்கிருப்பினும், எல்லாம் வல்ல இறைவனது இன்னருட்டுணை உடனிருந்து உதவுவதாக. நோயின்றியலும் உடலும், பிறர் நலம்பேணும் தூய உரைதரும் உளமும் வாய்மையின் வழுவாச் சொல்லும், நெறிப்படாச் செயலும், கடவுள் கருணையைத் துணைக் கொளும் ஆதரவும், மக்களிடத்துப் பண்பிற் பயில்தரும் அன்பும் ஆகிய இவ்வனைத்து நலங்களையும், எள்ளில் எண்ணைபோல் எங்கும் நிறைந்துள இறைவனது பேருளால் பெற்று, இந்நில மிசை பன்னெடு நாள் வாழ்க வாழ்க வாழ்கவே. சுபம். சுபம். சுபம்.

17-9-33. } இங்ஙனம், தங்கள் அன்பிற்குரிய,
பொள்ளாச்சி தாலூக்கா கிராம ஆரம்ப ஆசிரியர்கள்.

# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த

டானிக்




## மதனமஞ்சரி

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

40 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1..

---

இனம்! முற்றிலும் இனம்!!

## வைத்திய வித்தியா

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் சிலவு இல்லாமல் இனமாய் அனுப்பப்படும்.

---

மதன மஞ்சரி பார்மஸி, 1-94 சைனபஜார் ரோட், மதருஸ்.

## "பாரத நேசன்"

இஃது ஓர் உயரிய செந்தமிழ் மாதசஞ்சிகை. இதன்கண் பல பேரறிஞர்களால், சமயம், பொருளாதாரம், சுகாதாரம், தொழில், வியாபாரம் முதலிய பொருள்களைப் பற்றி நனுகி ஆராய்ந்து எழுதப்பெறும் கட்டுரைகளும், நூதன விநோத புனைந்துரைகளும் வெளிவரும் ஆதலால், பாமரர், பண்டிதர், சிறுவர், முதியோர், பெண்கள் அனைவரும் வாசிக்கக்கூடிய சஞ்சிகை இது ஒன்றே. வருட சந்தா 12-அணா அனுப்பி சந்தாதாரராவார்களாக. இது வி. பி-யில் அனுப்பப்படமாட்டாது.

"பாரத நேசன்" ஆபீஸ், சிந்தாதிரிப் பேட்டை, மதருஸ்.

# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

கலைமகள் வாசகம் முதல் வகுப்பு 0 2 6
வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. ஏ. எல். டி. இயற்றியது.

### கலைமகள் வாசகங்கள்

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு விலை அணா | 3 | வி. வீரராகவன், எம். ஏ. இயற்றியவை. |
| மூன்றும் வகுப்பு ,, | 4 | |
| நான்காம் வகுப்பு ,, | 5 | |
| ஐந்தாம் வகுப்பு ,, | 6 | |

### கலைமகள் கதாவாசகம்

முதல் புத்தகம் விலை 0 2 6
இரண்டாம் புத்தகம் விலை 0 3 0

### கலைமகள் கணித நூல்

| | | |
|---|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா | 5 | எஸ். தருமலிங்க நாயக்கர். |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, | 6 | |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, | 8 | |
| 4-வது புத்தகம் (5-வது வகுப்பு) ,, | 9 | |

### நீதிக்கட்டுரைக் கோவை

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் அணா | 4 | வி. ஞானதிக்கம், பி. ஏ. எல். டி. |
| இரண்டாம் புத்தகம் ,, | 7 | |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, | 4 | |

### இந்துதேச சித்திர சரித்திரக் கதைகள்

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் விலை அணா | 4 | டி. ஆர் ரங்கசாமி ஐயங்கார், எம். ஏ., எல். டி. |
| இரண்டாம் புத்தகம் ,, | 5 | |
| வட ஆற்காடு பூகோளம் அணா | 4 | எஸ் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி. ஏ., எல். டி. எம். ஆர். ஏ. எஸ். |
| செங்கற்பட்டு பூகோளம் ,, | 5 | |

### பாலர் கணிதம்

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் விலை அணா | 5 | எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். ஏ., எல். டி. |
| இரண்டாம் புத்தகம் ,, | 6 | |
| மூன்றும் புத்தகம் ,, | 7 | |
| நான்காம் புத்தகம் ,, | 8 | |
| ஐந்தாம் புத்தகம் ,, | 9 | |

| | | | |
|---|---|---|---|
| கந்தபுராண வெண்பா—வெண்பாப்புலி வேலுசாமிப் பிள்ளை | 4 | 0 | 0 |
| வாழ்க்கைச் சரிதை ... ... | 0 | 4 | 0 |
| உலக அதிசயங்கள் ... ... | 0 | 4 | 0 |
| முப்பெரும் புலவர் ... ... | 0 | 4 | 0 |
| தமிழ் இலக்கண வினாவிடை ... ... | 0 | 4 | 0 |
| இந்துஸ்தானத்து வீரர்கள்—எஸ். எஸ். அருணகிரிநாதர்... | 0 | 5 | 0 |
| விசித்திர விளக்கு—தமிழ்ப்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை | 0 | 6 | 0 |
| பெஞ்சமின் பிராங்க்லின்—பண்டிதர்-பக்கிரிசாமி செட்டியார் | 0 | 6 | 0 |

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி. கெ. 2, சுகின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதருஸ்.

# எமது தமிழ் நூல்கள்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கபட்டவை.)

எமது கோபால் புதிய தமிழ் வாசக புஸ்தகம் 1-5, சென்னை, மைசூர், திருவாங்கூர், சிலோன், பர்மா, துறைத்தனத்தார் அங்கீகாரம்செய்து ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் வைத்து நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் இது வரையிலும் பார்த்திராவிட்டால் உடனே எழுதவும்.

| | எ. எம். எஸ். இராகவன் பி. ஏ., எல். டி., எழுதியவை. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 1. | கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் | .... | 0 | 2 | 6 |
| 2. | கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் | .... | 0 | 3 | 0 |
| 3. | கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் | .... | 0 | 4 | 0 |
| 4. | கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் | .... | 0 | 4 | 6 |
| 5. | கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் | .... | 0 | 6 | 0 |
| | புதிய புஸ்தகங்கள். | | | | |
| 6. | கோபால் புதிய தமிழ்வாசகம் நெ. 6. வித்வான் எம். வி. வேணுகோபால் பிள்ளை | | 0 | 7 | 0 |
| 7. | கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 7. ,, | .... | 0 | 8 | 0 |
| 8. | கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 8. ,, | .... | 0 | 9 | 0 |
| 9. | உலக அதிசயங்கள் புஸ்தகம் 1. சி. கார்டன் முகவுரையுடன் | .... | 0 | 3 | 0 |
| 10. | ,, புஸ்தகம் 2. ,, | .... | 0 | 4 | 0 |
| 11. | ,, புஸ்தகம் 3. ,, | .... | 0 | 5 | 0 |
| 12. | தினசரி கணக்கு புஸ்தகம் 1. எஸ். ஜெகந்நாதன் | .... | 0 | 4 | 0 |
| 13. | தினசரி கணக்கு புஸ்தகம் 2. ,, | .... | 0 | 5 | 0 |
| 14. | தினசரி கணக்கு புஸ்தகம் 3. ,, | .... | 0 | 5 | 0 |
| 15. | சென்னை ராஜதானி பூகோளம்—இ. வி. கோபாலய்யர் (அச்சில்) | .... | 0 | 6 | 0 |
| 16. | சுகாதார விளக்கம் 4, 5-வது வகுப்புகளுக்கு உரியது. (இ வி. கோபால அய்யர் டிப்டி இன்ஸ்பெக்டர்) | .... | 0 | 5 | 0 |
| 17. | சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரி நாதர் | .... | 0 | 5 | 0 |
| 18. | கம்பர் அல்லது கவியரசு—பண்டிதர் ஆ. நா. கன்னையா | .... | 0 | 5 | 0 |
| 19. | தமிழ்ச் சிற்றிலக்கண வினு விடை—பண்டிதர் கா. ரா. கோவிந்த ராஜ முதலியார் | .... | 0 | 4 | 0 |
| 20. | சிறுவர் இந்துதேச சரித்திரம்—வி. ஜயராம அய்யர் பி. எ., பி. எல். | .... | 0 | 5 | 0 |
| 21. | ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம்—முதற் புஸ்தகம் எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. எ., எல். டி. | .... | 0 | 5 | 0 |
| 22. | ஸிவிக்ஸ் இரண்டாம் புஸ்தகம் ' | .... | 0 | 6 | 0 |
| 23. | கோபால் வாய்பாடு | .... | 0 | 1 | 0 |
| 24. | சூராவாதித்த சோழன்—பண்டிதர் ஆர். சாம்பசிவ சர்மா | .... | 0 | 12 | 0 |
| 25. | புத்திமானே பலவான்—எ. பாசுராமையர் எழுதியது. | .... | 0 | 10 | 0 |
| 26. | கிருஷ்ண தேவராயர்—கெ. பி. சேஷாத்திரி ஐயங்கார் | .... | 0 | 8 | 0 |
| 27. | பகீரதன்—பண்டிதர் ஆ. நா. கன்னையா | .... | 0 | 6 | 0 |
| 28. | பத்திராயு அல்லது ட்சிக்குரியோன்—வித்வான் மே. வி. வேணுகோபாலப் பிள்ளை | .... | 0 | 6 | 0 |
| 29. | துருவன் அல்லது விடா முயற்சியே வெற்றிக்குவழி—ஷெயார் | .... | 0 | 6 | 0 |
| 30. | ஏமாங்கதத்திளவரசன்—டி. என். சேஷாசலம், பி. எ., பி. எல். | .... | 1 | 4 | 0 |

புஸ்தக வியாபாரிகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் தக்க கமிஷன் தரப்படும். புஸ்தக விலைப்பட்டி இனுமாக அனுப்பப்படும். உடனே எழுதவும்.

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி.** புஸ்தக வியாபாரிகள், ஜார்ஜ் டவுன், சென்னை.

## வீரப் பெண்மணிகள்.

(ஸ்ரீமதி யவளம்மாள்)

பெண்களின் "வீரம்" என்றால் பிரமீப் போருண்டு பெண்கள் என்றாலே கோழைகள், அடுப்பூதப் பிறந்தவர்களென எண்ணம் இக்காலத்திலு மிருந்து வருகிறது. வீரப் பெண்மணிகள் பிறந்த இந்நாட்டில் பெண்கள் வீரம் குன்றி கோழைகளாய் மாறியது விந்தையாகவே யிருக்கிறது. "அன்று விரித்த கூந்தலை அள்ளி முடியேனென்று, நன்னயமாய்ச் சபதஞ் செய்த" பாஞ்சாலி பிறந்த இக்நாட்டில் பெண்களின் வீரம் எங்கு சென்று ஒழிந்ததோ தெரியவில்லை. ராஜப்புத்திர வீரத் தாய்மார்களும், பாஞ்சால தீரபெண் ரத்னங்களும், வங்காள வீரத் தாய்மார்களும், இன்னம் மங்கம்மாள் போன்ற வீரத் தமிழ் மங்கையர்களின் சரித்திரங்களும் எத்தனையோ உண்டு. அவைகளைப் பற்றி சிந்திப்பார் யார்? பெண்கள் அதை வாசிக்கவும் நினைக்கிறார்களில்லை. ;வீரம் என்பது ஆண்களுக்கு அணிகலமே யன்றி பெண்ணுக்கு அது அணிகலமல்லவென்ற பேதைப் புத்தியே இதற்குக் காரணமாகும். வீரம் ஆணுக்கு மட்டுமல்ல. அது ஆண் பெண் இருபாலருக்கு முண்டு. வீரம், ஆண், பெண், ஜாதிபேதமின்றி யாவர் இருதயத்திலும் உண்டாகும் ஒரு உணர்ச்சி. எவ்வித கஷ்டமான காரியத்தையும், துணிந்து செய்வதற்குத் தூண்டும் உணர்ச்சியே வீரமெனப்படும். அவ்வீரம் உயிரைப் பொருட்படுத்தாது. எவ்வித சங்கடத்தையும் கவனியாது அவற்றை யெல்லாம் அற்பமாகக் கருதச் செய்யும் உடல், பொருள், ஆவி யாவற்றையும் துரும்பாக மதிக்கத் தூண்டுவதே உண்மை வீரத்தின் லட்சியமாகும்.

### பேண்கள் வீரம்.

வீரம் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. ஆனால் இருபாலரின் வீரத்திற்கும் வித்தியாச முண்டு. பெண்கள் ஆண்களைவிட சாத்வீக வீரம் பொருந்தியவர்களென்பதை உலக அறிஞர்கள் ஒப்புக் கொண்ட விஷயமாகும். உதாரணமாக எந்த விதமான கஷ்டத்தையும் நோயையும் பெண்கள் ஆண்களைவிட மிகப் பொறுமையாகவும் சந்தோஷமாகவும் ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆடவர் அலறி முறையிடும் வேதனைகளைப் பெண்கள் முக மலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுவார்கள். இன்றும் பெண்கள் அமைதியாக எவ்வித வறுமையையும் மௌனமாக ஏற்றுக் கொள்ளக் கண்டிருக்கலாம். வறுமையை மிஞ்சிய கொடுமையில்லை. இவ்வறுமையை சகிக்க முடியாமல் ஆடவர் தடுமாறக் கண்டிருக்கிறோம். பெண்கள் அதை மனப்பூர்வமாக சகித்துக் கொண்டிருப்பது கண்கூடு. பெண்களின் தேக அமைப்பே அவ்விதம் அமைந்திருக்கிறதென தேசக்கூறு சாஸ்திரிகள் ஒப்புக் கொண்ட உண்மையாகும். ஆனால் முட்டாள் தனமாகக் கண்ணை மூடிக் கொண்டு எதையும் துணிந்து செய்வது வீரமாகாது. அறிவோடுகூடி, ஆராய்ந்து துணிந்து செய்வதே உண்மை வீரமாகும். இவ்வித வீரத்திற்கு நமது பாரத வீரத் தாய்மார்கள் பேர் பெற்றவர்கள். அக்காலத்தில் தங்கள் விலை மதிக்க முடியாத கற்பைப் பாதுகாக்க நமது வீரத்தாய்மார் புரிந்த வீரச் செயல்களுக்கு அளவில்லை. அவற்றைப் படிக்குந்தோறும் நமது இருதயத்தில் வீரம் இயற்கையாகவே நீரூற்றுப் போல் ஊறுவதைக்காணலாம். வாழையடி வாழையாக வந்த நமது பெண்மணிகளின் மனதில் வீரமில்லாமலில்லை. ஆனால் அந்த வீரத்தை ஜொலிக்கச் செய்வதே நமது கடமையாகும். நமது வீரமும் சேவையும் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகவே கருதல் வேண்டும். நாம் வெளியே சென்று பெரும் வீரதீர செயல்களைச் செய்து முடிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. வீட்டினுள்ளிருந்து கொண்டே எத்

தனையோ விதமாக நமது வீர சக்தியைப் பிரயோகிக்கலாம். நமது கணவர்களுக்கு, அவர்கள் இன்பத்திலும், துன்பத்திலும் துணையாய் நின்று வீர உபதேசம் செய்து வரலாம். பல வகைகளிலும் அவர்கள் கடமைகளில் உதவியாயிருந்து சதா முகமலர்ச்சியுடன், அவர்கள் இருதயத்தில் வீரத்தை யூட்டலாம். இவை யாவற்றிலும் நமது மக்களை வீரர்களாக்க வேண்டியதே நமது பெரும் கடமையாகும். நமது எதிர்கால சந்ததியே தேசத்தின் வைரத் தூண்களாவர்கள். நாம் பெற்றெடுக்கும் தங்கக் கட்டிகளை சிங்கக் குட்டிகளாய் உருவாக்கும் சக்தி நம்மிடத்தில் தானிருக்கிறது. "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" நாம் பாலூட்டித் தாலாட்டி தொட்டிலில் தூங்க வைக்கும் நம் மக்களை உலகத்தை ஜெயிக்கத் தக்க வீராதி வீரர்களாக்கலாம். நாம் ஊட்டும் பாலுடன் தேச பக்தி, தந்நலம் மறுக்கும் தியாகத்துடன் கூடிய வீரப்பாலும் ஊட்டிவரவேண்டியதே நமது பெருங்கடமையாகுமென்பதை எப்பெண்மணியும் மறுக்க முடியாது. அவர்கள் தவழ்ந்து தளர்ந்து நடக்கும் காலத்திலும் அவர்கள் இருதயத்தில் அச்சமென்பதை ஒழித்து, வீரம் பொங்கி எழும்படி செய்யவேண்டும். இவ்விஷயத்தில் மேனாட்டுப் பெண்களை கவனித்தல் நலம். அவர்கள் நாகரீகப் போக்கை நாம் கவனிக்க வேண்டாம். ஐரோப்பிய நாடுகள் இவ்வளவு துரிதத்தில் முன்னேற்ற மடைவதற்கு அப்பெண்மணிகளின் வீரமும், தேச பக்தியும், தியாகமும், மக்களை அவர்கள் பழக்கி எடுக்கும் முறையுமே முக்கியகாரணமாகும், மேனாட்டை விடுத்துக் கீழ் நாடுகளில் ஒன்றாகிய ஜப்பானை எடுத்துக் கொள்ளுவோம். அங்கும் பெண்களின் தீரமும், வாலிபர்களின் ஊக்கமுமே ஜப்பான் முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்து வருகிறது.

### ஆர்க்ஜோன்.

இந்திய வீரத் தாய்மார்களின் சரிதை பல உண்டு. ஆனால் இங்கு இதர நாட்டுப் பெண்மணிகளின் வீரச் செயலைக் குறிப்பிடுவது நலமென்று நினைக்கிறேன். பிரான்ஸ் இன்று ஒரு சுதந்திர நாடாக விளங்குவதற்கு அங்கு உதித்த ஒரு வாலிப வீரப்பெண்ணே காரணமாகும். ஆர்க்ஜோன் என்ற 18 வயது சிறுமி, ஆண் உடை தாங்கி, வீராதி வீரர்களுடன் கலந்து பிரான்சை எதிர்த்து ஜெயித்த ஆங்கிலேயரை முறியடித்து வெருட்டினாள். முடியிழந்த பிரான்ஸ் மன்னருக்கு முடி சூட்டி வைத்தாள். இறுதியில் அவள் ஒரு துரோகி என்ற சதிக்குள்ளாயினாள். ஆங்கிலேயர் அம்மாதைக் கைது செய்து அவள் ஒரு "பேய் பிடித்த பெண்" என உயிரோடு தீக்கிரையாக்கினார்கள். அதற்கும் அப்பெண் அஞ்சாது தீக்கிரையானாள். இன்றும் அப்பெண்ணை மேநாடெங்கும் வீராதி வீரப் பெண்ணாகப் போற்றி வருகிறார்கள். இப் பெண் லக்ஷக்கணக்கான சோல்ஜர்களுடன் கலந்திருந்த போதிலும் தன் கற்புக்கும், அடக்கவொடுக்கத்திற்கும் அணுவளவும் பங்கமில்லாது நடந்து கொண்டாள். இவர் வீராதி வீரர் குலத்தில் தோன்றிய பெண்ணல்ல. சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பெண்ணே ஆர்க்ஜோன். ஆர்க்ஜோன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி ஜெயித்திராவிடில் பிரான்சின் கதியே வேறு விதமாக மாறியிருக்கும். யுத்த களத்தில் அவர் மார் மீது ஓர் அம்பு பாய்ந்து இரத்தம் பீறிட்டு ஓடிய பொழுதும், இவள் வீரங்குன்றாது போராடிய வீரம் எந்த பிரஞ்சுக்காரர் மனதையும் விட்டு என்றும் நீங்காது. இவள் பார்வையும் வீர கர்ச்சனையுமே லக்ஷக்கணக்கான பிரஞ்சு வீரர்களின் மறைந்த வீரத்தைத் திரும்பவும் உற்பத்திச் செய்யக் காரணமாயிருந்தது. பெண்களே உலக சக்தி என்ற கொள்கை இவ் வீரப் பெண்மணியிடமே நிரூபிக்கப்பட்டதெனலாம்.

# ஆசிரியர் பகுதி

## போதனா சாதனம்

(ஸ்ரீமான். கி. பி. சேஷாத்திரி அய்யங்கார்)

ஒரு மாணவன் ஒரு பாடத்தை ஒரு தரம் அல்லது இரண்டு தரம் படித்தானானால் அவன். தான் படித்ததை மறக்காமல் கவனத்தில் வைத்துக்கொள்வான். மற்றொரு மாணவன் அதே பாடத்தைப் பலதரம் படித்தும், தான் படித்ததில் கொஞ்சமும் தெரிந்துகொள்ளாது மறந்துவிடக்கூடும். இதற்குக் காரணமென்ன? முதல் மாணவன் படிக்கும்போதே பாடத்தில் முழுகவனத்தைச் செலுத்தி, அதைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். இரண்டாவது மாணவனோ எனின் பாடத்தில் கவனமின்றியும் அதை நினையாமலு மிருந்தான். இதுதான் ஒருவன் தான் படித்த விஷயத்தை மறவாம லிருப்பதற்கும் மற்றொருவன் மறந்துபோவதற்கும் முக்கிய காரணம்.

ஒரு மாணவன் ஒரு குறித்த வாசகத்தை மனதில் கவனஞ் செய்ய எண்ணுவானாயின் அவன் அவ்வாசகத்தை உரக்கப் படிக்கவேண்டும். அது தான் சிறந்த முறை. அம்மாணவன் உரக்கப் படிப்பானானால் அவனது கண்களும், காதுகளும் அவ்வாசகத்தை மறவாமல் மனத்திலிருத்திக் கொள்ளப் பயன்படுகின்றன.

ஒவ்வொரு விஷயமும் மனதில் நுழைந்து ஞாபகத்திலிருக்க வேண்டுமானால் அது ஏற்கனவே மனதிலுள்ள விஷயங்களில் கொஞ்சமேனும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அவ்விதம் சம்பந்தப்படா திருக்குமானால் அவ்விஷயம் மனதில் தங்கியிருக்க முடியாது. உடனே மறந்து விடப்படும்.

ஒரு விஷயத்தை மனத்தி லிருத்திவைக்க உருப்போட்டு மனப்பாடஞ் செய்யும் வழக்கம் மிகவும் கெட்டது. அடிக்கடி மென்மேலும் ஒரு விஷயத்தை உருப்போடுவதனால் மாணவன் அதை மனத்தில் பதித்துக் கொள்கின்றான். அப்படி மனப்பாடம் செய்வதில் மனதிற்கு அதிகமாகச் சிரமம் கொடுக்கவேண்டியிருக்கிறது.

### விஷயத்தை மறவா திருக்க மனத்தைப் பழக்குவ தெப்படி?

விஷயத்தை மறவாதிருக்க மனத்தைப் பழக்குவ தெப்படி என்பது இந்திரியப் பயிற்சியுடன் சம்பந்தப் படுத்தப்பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள பொருள்களைக் குறித்த ஞானத்தை இந்திரியங்கள் மூலமாகக் கிரகிக்கின்றோம். அப்படிக் கிரகித்துக்கொண்ட ஞானம் இந்திரியங்களின் முன் பிரத்தியட்சமாகத் தோன்றாமல் போயினும், மனத்தின் முன் தோற்றுமாயின் அப்பொருளின் ஞானம் முதிர்ச்சி யடைகின்றது. இந்திரியங்கள் ஏதேனும் ஒன்றினால் அறிந்துகொள்ளப்பட்ட அனுபவம், சிலகாலங் கழித்து அதேவிதமான அனுபவம் நேரிடாவிட்டாலும் மறுபடியும் அந்த அனுபவத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம். உதாரணமாக ஒருவன் அப்பொழுதுதான் பிரயாணப்பட புறப்படும் புகைவண்டியின் சப்தத்தைக் கேட்டு அனுபவப்பட்டவன் அந்த சத்தத்தின் அனுபவ ஞானத்தைத் தன் மனத்தில் மீண்டும் உதிக்கும்படிச் செய்யலாம். வெகு தூரத்திலிருந்து வரும் எருதின் எக்காளத்தின் சத்தத்தையும் ஒருவாறு மனதில் உதிக்கச் செய்யலாம். இதைப்போலவே மல்லிகைப் பூவின் நறுமணத்தையும், ரோஜா மலரின் பரிமளத்தையும், காபி, டீ முதலிய இனிய பானங்களின் ருசியையும் மனத்தில் நிகழச் செய்யலாம்.

## ஞானத் தோற்றம்

எந்த அனுபவ ஞானமும், மனத்தில் மறவாமல் ஞாபகத்துடனிருப்பது மனத்திலுள்ள விஷயங்களுடன் சம்பந்தப் பட்டிருப்பதைப் பொறுத்திருக்கிறது. "ஞானத் தோற்றம்" என்பது ஒரு பொருளின் அனுபவ ஞானத்தை மனத்தில் மீளவும் ஞாபகத்திற்குக் கொண்டு வருவது. அப்பொழுது தான் புறப்படும் புகை வண்டியின் சத்தத்தையும், இரைச்சலையும் மனத்தில் மீளவும் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு ஞானத்தோற்றம் மேன்மேலும் பல தோற்றங்களையும் மனத்தில் இழுத்துக் கொள்ளும் சக்தி பெற்றது. நீங்கள் உங்கள் பென்சிலைக் குறித்து எண்ணுவதாக வைத்துக்கொள்ளுங்கள். உடனே உங்கள் மனத்தில் பற்பல விதமான எண்ணங்களும் தோற்றங்களும் நிகழ்கின்றன. அதாவது, அது எழுதப்படும் நோட்புத்தகங்களும், அதைச் சீவும் கத்தியும், அது வழக்கமாக வைக்கப்பட்டிருக்கும் மேஜையும், அந்த மேஜை வைக்கப்பட்டிருக்கும் அறையும் என்று இன்னோரன்ன விஷயங்கள் சங்கிலித்தொடர்போல் உதிக்கின்றன. இவ்விதமே பொருள்களின் ஞானம் மனதிலுள்ள விஷயங்களுடன் சேர்க்கப்படுகின்றது.

ஒரு விஷயம் பின்னும் பல எண்ணங்களைச் சங்கிலிபோல் தொடரச்செய்யும், அப்படி ஒன்றாகச் சேர்ந்த அபிப்பிராயங்கள் யாவும் காரணத்திற்கு அனுகுணமாய் சரியாகத் தோன்றுமானால் மனது அவ்விஷயத்தை மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத் தடையேயில்லை. ஆகையினால், மனத்தை மறவாமலிருக்கப் பழக்குவதானது அம்மனத்தை விஷய ஞானத்தைச் சேர்க்கும் சக்தியில் நன்றாகப் பழகுவதே தவிர வேறொன்றுமில்லை. பொதுவாக, இந்திரியங்களினால் கிரகிக்கப்பட்ட பெரும்பாலும் நேத்திரம், செவி இவைகளினால் கிரகிக்கப்பட்ட ஞானம் சரியாகச் சேர்க்கப்படுமாயின் அல்லது சம்பந்தப்படுமாயின் அஞ்ஞானம் மனதினால் மறவாமல் ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். கண்ணினால் பார்க்கப்பட்ட ஒரு பொருளை மனது ஞாபகப் படுத்துகிறது. இது பார்வை ஞானம். காதினால் கேட்டதையும் மனது கவனத்திற்குக் கொண்டு வருகிறது. இது "கேள்வி ஞானம்." உபாத்தியாயர் தம்முடைய வச மொப்புவிக்கப்பட்ட மாணவர்கள் கண்ணினால் பார்ப்பவைகளின் மூலமாயும், செவியினால் கேட்பவைகளின் மூலமாகவும் ஞாபக சக்தியைப் பெறப் பழக்கப்பட வேண்டுமென்பதைத் தம்மனதில் கொள்ளவேண்டும்.

### ஒரு பாடத்தை மாணவர்கள் மனதில் பதிய வைப்ப தெப்படி?

ஒரு பாடத்திலுள்ள முக்கியமான அம்சங்களை எல்லா மாணவர்களும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள சக்தி பெற்றவர்களாக விருக்க வேண்டும். மாணவர்களின் மனத்தில் அவ்வம்சங்களை முக்கியமான விஷயங்களைப் பதியும் படிச் செய்ய வேண்டும். இவ்விதம் செய்வதனால் அவர்களின் மனதில் அந்த முக்கியமான விஷயங்கள் வேரூன்றி நிலைபெறும். ஒரு பொருளின் ஞானத்தைப் பெறவேண்டுமானால் மற்றொரு பொருளின் ஞானத்துடன் சேர்க்கப்படவேண்டும். இச் சேர்க்கைதான், மனதில் குடிகொண்டிருக்கும் விஷயங்களுக்கு சங்கிலி போல் உதவுகின்றது. உபாத்தியாயர் தமது பாடத்தில் இம்மாதிரி சேர்க்கப்பட்ட விஷயங்களை மாணவர்கள் ஞாபகத்தி லிருத்திக் கொள்ளும்படி வேண்டிய சேர்க்கைகளை உபயோகப் படுத்த வேண்டும்.

உபாத்தியாயர் வகுப்பில் பேசவேண்டும். கரும்பலகையில் குறிப்புகளும் படங்களும் வரையவேண்டும். மாணவர்களை பாடத்தைக் குறித்துப் பேசவும் கரும்பலகையில் எழுதவும் படங்கள் வரையவும் அனுமதியளிக்கவேண்டும். பல சித்திரப் படங்களைக் காண்பித்தும், தாம் எழுதிய சித்திரங்களுக்கு வர்ணந் தீட்டியும் காண்பிக்க வேண்டும். பலவித முறைகளினால் பாடத்தின் விஷயத்தை மாணவர்களின் மனதில் பதியவைப்ப தானது பிரைமரி வகுப்பு



பிள்ளைகள் போதனை விஷயத்தில் மிகவும் சிலாகிக்கப்பட்ட முறையென்று யாவராலும் தெளியப்பட்டது.

### மனதிற் கொள்ளுந் தன்மை

போதனா சாஸ்திரத்தில் இத்தன்மை மிகவும் இன்றியமையாதது. ஒரு பொருளின் விஷயத்தை மனதில் கொள்ளச் செய்வதுதான் இத்தன்மையின் காரியம். இத்தன்மை, விஷயங்கள் ஒன்றோடொன்று மனோதத்துவத்தின் மூலமாகச் சேர்க்கப் படுவதன் முடிவினால் ஆவது. வெளி யுலகத்தின் பொருள்களின் விஷய ஞானம் உணர்ச்சியை அடையாததுமாக ஏற்கனவே மனத்திலிருந்த விஷயங்களுடன் எவ்விதத்தினாலும் சம்பந்தப் படுகிறது. அத்தகைய சம்மந்தம் ஏற்பட்டால்தான் அவ்விஷய ஞானம் மனதில் நுழைய ஏதுவில்லை. புதிய ஞானம் பழைய ஞானத்துடன் கலப்ப தென்பது அந்த மனத்தில் ஏற்கனவே நிறைந்திருக்கும் விஷய ஞானத்தைப் பொறுத்தது மனதில் பல விஷயங்களின் ஞானம் நிரப்பப்பட்டிருக்கிறது. அப்படிக்கிருக்க அவைகளிலிருந்து ஒரு விஷயத்தை மனத்தினுள் சேர்க்கப் புதிய விஷயத்தை அதை யொட்டின விஷயம் வரவேற்கின்றது, அப்படி ஒருபுதிய விஷயஞானம் பழையஞானத்துடன் கலக்கப்பட்டபின்பு இது புதியது, இது பழையது என்று வேறு படுத்த முடியாது.

இதில் அநேக விதங்களிருக்கின்றன. ஒருவன் ஒரு விஷய ஞானத்தைப் பற்பலவித மூலங்களாகத் தெரிந்து கொள்வதைப் போல பல விதங்களிருக்கின்றன. ஓரே விதமான அனுபவம் ஒவ்வொருவரால் பற்பல விதமாக மனதில் கொள்ளப் படுகிறது. உதாரணமாக ஒரு குழந்தை. வீடு நெருப்பினால் கொளுத்தப்பட்டுப் பிரகாசமாய் எரியும்போது கை கால்களை உதறிக்கொண்டு அதிக சந்தோஷப்படுகிறது. அதே அனுபவத்தை ஒரு மனிதன் காண்பானாயின் வேறு விதமாக மனத்திற் கொள்வான். சிறுவர்கள் வண்டியில் உட்கார்ந்து ஆற்றைக் கடக்கும் போது அவர்கள் வண்டியினின்று மிழிந்து நீரில் நடக்க விரும்புகின்றனர் அதே அனுபவத்தை அனுபவிக்கும் மனிதன் வேறு விதமாக மனதிற் கொள்வான்.

ஒருவனை அவன் வாழ்க்கையில் நலம் பெற்றிருக்கும்படிச் செய்வது தான் கல்வியின் பயன். பிற்கால வாழ்க்கையில் உபயோகமாக விருக்கும் பற்பல விஷயங்களின் அறிவை ஒவ்வொருவனும் அடைய, போதனை என்பதனால் தான் செய்யலாம். அப்படி யறிந்து கொண்ட விஷய ஞானத்தை மாணவர்கள் அடிக்கடி கவனத்தில் கொண்டு வரவும் சமயம் ஏற்படும் போது அவ்வறிவை உபயோகப்படுத்தி வரவும் வேண்டும்.

பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்கள் எல்லாம் உணர்ச்சியையும், புத்தியையும், அறிவையும் அளிக்கத்தக்கனவாக விருக்கவேண்டும். பள்ளியில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவன் நன்றாக உணரவும், அப்படி உணர்ந்தவைகளை நன்றாக நினைக்கவும், நினைத்த வண்ணம் நன்றாகச் செய்யவும் சக்தி பெற்றவராக விருக்கவேண்டும். ஒவ்வொரு மாணவனும் திரிகரண சுத்தியைப் பெற்றிருக்க வேண்டியது அவசியம். கல்வி கற்பதன் பயன் இது வாகுமானால், பள்ளியில் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்கள் ஒன்றுக்கொன்று எப்படி சம்பந்தப்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்பதை ஆலோசிக்கவேண்டும் பிள்ளைகளின் பாடங்களை தேர்ந்தெடுக்க வேண்டுவதில் கவனிக்க வேண்டிய சில அம்சங்களும், விதிகளும் இருக்கின்றன. அவை பின் வருமாறு:—முதன் முதலில், சிறுவர்களுடைய மனோ சக்திக்குத் தகுந்தபடி விஷயங்கள் போதிக்கப்பட வேண்டு மென்பதை அறிந்து கொள்ள வேண்டும். விஷயங்களை மேன்மேலும் போதிப்பதும், வேகமாகப் போதிப்பதனால் மாணவர்கள் கற்றுக்கொடுத்ததை யோசிக்கவும், பின்பற்றவும் முடியாதவர்களாகி, கவனமின்மையையும், அஜாக்கிரதையையும் கொள்வார்கள்.

இரண்டாவதாக, பள்ளியில் மாணவர்கள் படிப்பது சிலகாலமே யாகும். சில ஏழைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சில வகுப்புகள் மாத்திரமே படிக்க வைத்த பிறகு நிறுத்தி விடுகின்றார்கள். அவர்கள் பள்ளிக்கூடத்துச் சம்பளம் கட்டச் சக்தி யற்றவராகித் தங்கள் குழந்தைகளை நிறுத்திவிடுகின்றார்கள். ஆகவே பிள்ளைகள் படிக்கும் காலம் மிகவும் சொல்பமாக விருப்பதனால் அதற்குள் கற்றுக்கொடுக்கப்படவேண்டியவைகளை எல்லாம் விடாமல் கற்றுக்கொடுக்கப் படவும் வேண்டும். சில வருஷகாலத்திற்குள் அதிகமான கல்வி விஷயங்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டியது பள்ளிக்கூடத்தின் முக்கிய நோக்கமாகவிருக்கவேண்டும்.

மூன்றாவதாக, போதிக்க எடுத்துக் கொள்ளப்பட்டபாடங்கள் பரீக்ஷைகளில் தேறவேண்டும் என்னும் நோக்கத்துடன் மாத்திரம் கற்பிக்கப் படக்கூடாது. கல்வி கற்றதின் பயன் ஒருவனை வாழ்க்கையில் நல்ல குணத்துடனும் யோக்கியதையுடனும் இருத்துவதுதான். பரீக்ஷைகள் தேறுவதற்காகப் பாடங்கள் போதிக்கப் படுமாகில் அது கல்வி கற்றதன் பயனை அளியாது.

நான்காவதாக, பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் பிற்கால வாழ்க்கைக்கு அத்தியாவசியகமான பாடங்கள் நன்றாகப் போதிக்கப் படவேண்டும். ஒவ்வொரு பிரதம பாடசாலைகளிலும் தாய்ப்பாஷையில் வசனமும், எழுத்தும், இலக்கணமும், வியாசமும், கணிதமும், பொருட்பாடமும், கொஞ்சம் சரித்திரமும், பூகோளமும், தொழிற் கல்வியும், இன்னும் தேகாப்பியாசக் கல்வியும் கொஞ்சம் கொஞ்சம் கற்பிக்கப்படவேண்டும். இவைகளின் ஞானம் மாணாக்கர்களுக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை ஒருவரும் மறக்க ஒண்ணாது.

[தொடரும்.]

---

"பாலோடாயினும் காலமறிந்துண்"

"பசித்துண் மசித்துண்," மாணவர்கள் எலிமெண்டரி படிப்பு காலங்களில் படிப்பில் செலவழிக்கும் காலத்தைவிட அதிக காலம் விளையாடுகிறார்கள். இதனால் தக்க பசியை அடைந்து உண்கிறார்கள். வரவர விளையாட்டு குறைவதால் பசி குறைந்து விடுகிறது. மிளகாய் சர்க்கரை போன்ற உத்தீபனங்களால் பலாத்காரமாய் உணவை வயற்றில் தள்ளிவிடுகிறார்கள். மசித்துண்பதே கிடையாது. பசியில்லாத காலத்திய உணவு, மூளைக்கு போஷணத்தைக் கொடாததோடு, மங்கவும் செய்து, விஷயங்களை வாங்கி மனதில் பதிந்து ஞாபகத்தில் வைக்கும் தன்மையையும் அழிக்கிறதென்பது எனது துணிபு. நிற்க மற்ற புது வழிமாணவர்கள் ஸ்கூல்களில் இப்பரீக்ஷை காலத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முந்தி நடந்த செலக்ஷன் பரீக்ஷையில் தேறிய இவர்கள், இப்பரீக்ஷையில் அபஜெயமடைய தனிக்காரணமும் இருக்கவேண்டும். இது விஷயத்தில் மாணவர்கள், தங்கள் குற்றத்தை பரீக்ஷா அதிகாரிகள் மீதே சுமத்திவிடுகிறார்கள். 100-க்கு 7 நபர்கள் தேறினார்கள்; 93 நபர்கள் தவறினார்கள். தேறினவர்கள் எவ்வழிபோனார்களோ நீங்கள் ஏன் அவ்வழி செல்லவில்லை? யென்றால் நாங்கள் சரியாய் படிக்கவில்லை; தவறினோமென்று ஒப்புவதில்லை. தேறினவர்களைவிட அதிக கஷ்டப்பட்டதாகவும் கூறி, குற்றத்தை வெளியில் காட்டிவிடுகிறார்கள்.

வெளிக்குற்றம் என்பதை எம்போலியர்கள் ஏற்கமாட்டார்கள். பரீக்ஷை நெருங்க நெருங்க, சரீர அப்பியாச காலத்தையும் படிப்பில் செலுத்தி, நிர்விசார தூக்கமின்றியும் அதிகமாய் கவலையுடன் கஷ்டப்படுவதால், மறுபடியும் பசிகுறைந்து, விசாரப்பசி அதிகமாகியுண்பது காரணமாகாமல் போகுமா? "ஸந்தோஷம் ஸகலபலம்" ஸந்தோஷப்பசியில்லாத கால உணவே மூலகாரணமென்பதை மறுக்க முடியுமா? பசியைகவனித்து உண்பார்களாயின் அடுத்த முறை இழந்த அறிவையும் சேர்த்து இரட்டிப்பாய் அடையத் தவறமுடியுமா? தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வியர்த்தமாகுமா? முயற்சி திருவினையாக்கும், முயற்சியுடையோர் "இகழ்ச்சியடையார்." மிளகாய் பஹிரங்க சத்துரு, சர்க்கரை அநுகூல சத்துரு என்பது என்றும் ஞாபகத்திற்குறியது.

# சுகாதாரப் பகுதி

## அம்மை நோய்—அம்பாள் கடாக்ஷம்

1931 வருஷம் நமது மாகாணம் பூராவும் அம்மை நோயால் மரித்தவர்களின் தொகை 4660 என்றும் இந்த தொகை கீழ் நடந்த பத்து வருடங்களின் சராசரி தொகைக்கு குறைவென்றும் சுகாதார டைரக்டர் கூறுகிறார். மற்ற நோய்களால் மரித்தவர்களின் தொகை 1,067,912 என்றும் கூறுகிறார். அம்மைநோயில் மரணம் குறைந்தாலும் மற்ற நோய்களால் மரணம் குறையாமல் அதிகரித்திருக்கிறது. கட்டி அடித்தால் என்ன? விட்டு அடித்தால் என்ன? எப்படியாயினும் மரணம் அதிகரித்தே வருகிறது. மரணத்தின் காரணங்களை பாகுபாடு செய்யும் அதிகாரம் டாக்டர்களிடமே இருக்கிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனன மரண குமாஸ்தாக்களால் ரிபோர்ட் செய்யப்படும் காரணங்களை டாக்டர்கள் அப்படியே ஒப்புக்கொள்ளாமல் தங்கள் இஷ்டப்படி பாகுபாடு செய்கிறார்கள். அதைப்பற்றி நாம் கூறும் ஷராக்கள் காட்டில்காய்ந்த நிலவுபோல் ஆகுமன்றோ? அம்மை நோயைத்தடுப்பதற்காக 31 வது வருஷத்தில் ரூ 7,'4,200 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை முந்திய வருடத்தைவிட 5400 அதிகமாகும். இவ்வளவு திரவியம் சாம்பலில் செய்த ஆஹூதிபோல் வியர்த்தமாகியும் வாயை மூடிக்கொண்டு மனதால் சபிக்க வேண்டியதாயிருக்கிறது. "வாக்ஸினேஷனே" குட்டம் முதலிய நோய்களுக்கு காரணமென்பது இயற்கை வைத்தியர்களின் கொள்கை. இரத்தத்தில் அம்மைப்பால் வைப்பது இயற்கைசட்டம் மாத்திரமின்றி மதவொழுங்குகளுக்கும் முரண்பட்டதாகும். அம்மை தடுப்பு சிகிச்சை நம் நாட்டிற்கு புதிதானது, பரதேசியம்!

### பிரட்டன் காட்டும் பாதை

இங்கிலாந்தின் மரணவிகிதம் 100-க்கு 12 இந்தியாவிலோ 27!! வாக்ஸிநேஷன் சிகிச்சை மேனாட்டு டாக்டர்களால் நம் நாட்டிற்கு புதிதாக கொண்டு வரப்பட்டது. மேனாட்டு டாக்டர்களில் சிலர் இதன் பயனை கவனித்து நன்மையை விட தீமையதிகமிருப்பதை அறிந்து தங்கள் நாட்டில் ஜனங்களுக்கு புகட்டிவந்தனர். இதற்காக சங்கங்கள் தோன்றி ஓயாமல் பிரவசனமும் செய்யப்பட்டு வருகிறது. இதன் பயனாக வாக்ஸினேஷன் செய்துக் கொள்வது கட்டாயமாக விருந்த சட்டம் மாற்றப்பட்டது. நம்பிக்கை உடையவர் வாக்ஸினேஷன் செய்துக் கொள்ளுகிறார்கள். நம் நாட்டில் ஜனங்களில் பெரும்பாலர் நம்புவதில்லை. தீண்டாதார்கள் இதை நம்பாததோடு இதை வெறுத்து இதை தடுக்க மற்றவர்கள் சகாயம் கோருகிறார்கள். ஸகாயம் செய்யாத யாம் தீண்டாதார் முன்னேற்ற சகாயமென்பது வாய் உபசாரமன்றோ? இந்த வாக்ஸினேஷனால் மக்களின் அறிவு முன்னேற்றம் கெட்டுவருமளவை விவரிக்க ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும் முடியுமா? பிரிட்டன் காட்டும்பாதையை பின்பற்றாமல் பிரிட்டன்மீது குறைகூறி காலம் கழிப்பது தகுதியா?

### அம்மை

அம்மை:—இது காண்பதற்கு முந்தி மொத்தமாய் அசௌக்கியம் உண்டாகிறது. ஸந்தோஷ வாழ்க்கை யில்லாததோடு கவலை வாழ்க்கையும் உண்டாகிறது. தூக்கமும் பசியும் குறைந்து விடுகிறது. தலைவலி, இடுப்பு வலி, கைகால் ஓச்சல் உண்டாகி ஜுரமும் காண்கிறது. நோயின் அளவுக்குத் தக்கபடி ஜுரம் 104 டிக்கிரி வரையில் உண்டாகும். புத்திமாறுட்டமும் வாய் பிதற்றலும் உண்டாகும், கண்கள் சிவக்கும், பிறகு கொப்பளங்கள் உண்டாகும். கொப்பளங்களின் நிறம், பருமன் முதலியவைகளைக்கொண்டு தட்டை, பயிர், புட்லம்மை, பெரியம்மை, முதலிய பெயரிட்டுக் கூறுவர். கொப்பளங்கள் கருமையாயின் பனைவாரி என்றும் பிழைப்பது புனர் "ஜன்மம்" என்றும் கூறுவர். வெளிப்புரப் கொப்பளங்கள் குறைவாக விருந்து ஜுரம் வேகமாக விருந்தால் உள் அம்மை என்பர். அதிகமான சீதேக்க அம்மையில் தேகமுழுவதும் கொப்பளங்கள் காணும். அம்மை "நிறைபாரம்"

எனக்கூறுவர். மூத்திர துவாரம், குதவழியில் கொப்பளங்கள் உண்டானால் ஜல, மலம் வெளிப்பட வெகு கஷ்டமாகும். தொண்டை, வாய் முதலிய விடங்களில் அம்மை காணில் தண்ணீர் குடிப்பதும் கஷ்டமாகும். சுவாஸப்பைகள் அம்மையில் மூச்சு விடுதல் கஷ்டமாகும். மூளையில் கொப்பளங்கள் இருப்பதின் அடையாளம் மதிமயங்கி விடுவதேயாகும். கண்களில் அம்மையுண்டாகி கண்கெட்ட கேசுகளுமுண்டு. நிறைபார அம்மை கேசுகளில் நோயாளி அம்மை கொப்பளங்களில் உண்டாகும் குத்தலை அநுபவிக்கும்போது ஆயிரம் தேள் கொட்டினாற்போல் துடிப்பான். தூக்கிவிட்டவன் துடிப்பைப் போலிருக்குமாகையால் யாரும் பார்க்கவொட்டாமல் வைப்பதின் கருத்து இதுவே யாகும். பிழைக்கக் கூடிய கேசுகளில் கொப்பளங்கள் உடைந்து சீ வெளிப்படும். சீயில் துர்நாற்றம் வீசுமாகையாலும் இதரர்கள் அவரிடம் அணுகவிடமாட்டார்கள். கொப்பளங்கள் உடையாவிட்டால் அம்மை வயிற்றில் இறங்கி விட்டது பிழைக்க மாட்டான் என்று முடிவு கட்டி கூறுவர். இவ்வளவு தூரம் பரக்க எழுதியதின் நோக்கம் நோய் என்பது கப சீ மலத்தேக்கமென்று புத்தியில் ஆழப்படியவே, இதையே பிரயஸர் அர்னால்டு எஷர்ட் பலமாய் வற்புறுத்துகிறார்.

சீ

நோய் என்பதை உடலின் உள் பாகத்தில் சீ போன்ற மலத்தேக்கமே என்று கொள்ளின் எந்நோயையும் சுலபமாய் நீக்கி விடலாம். நோய்கள் பல, காரணங்களும் பல வென்ற தத்துவத்தை மனதில் நாட்டி வளர்த்தால் "கொடியில் உள்ள ஒணானை காதில் விட்டு குடைகிறது" என்றகதையாய் அவஸ்தைப்பட வேண்டியதாகும். நோய்களுக்கு மனமே மூலகாரணமாவதால் மனதால் எந்நோயை நீக்கிக்கொள்ளக்கூடாது? நோயை நீக்கி சுகம் பெற அறிவு தவிர இதர சாதனம் யாதுவேண்டும்? நோய் என்பது ஆரோக்கிய குறைவு தவிர வேறன்று என்ற நம்பிக்கையை யடைந்துவிட்டால் நோய் மாயமாய் பறக்காமலிருக்குமா? நோய் என்ற தனி நிலைமை உண்டு என்று மனதில் கொள்ளின் "மனம்போல் வாழ்வு" சாஸ்வத நோயாளி யாயிராமல் தப்ப முடியுமா? இந்த அஞ்ஞான விடுகையே ஆரோக்யத்தின் அடிப்படை. அம்மையை நோய்களின் தாய் என்று திட்டப்படுத்தி யிருக்கும் தமிழ் நாடு சொரி, சிரங்கு, கரப்பான், வேர்க்குரு, ராஜப்பிளவை, போன்ற கொப்பளங்களை அம்மையிலேயே சேர்த்திருக்கிறது. இதைவிட தமிழ் நாகரீகத்திற்கு வேறு சிறப்பு யாது வேண்டும்? அம்பாள் நோய் என்பதின் கருத்து, ரக்ஷிக்கவந்தது என்பதாகும். நமக்கு கெடுதிசெய்ய வந்ததன்று.

துளசி தீர்த்தம்.

தற்கால இஞ்சக்ஷன் டாக்டர்கள் நீரின் குணத்தையும் துளசியின் கூட்டுப்பாடுகளையும் அறியாததால் தண்ணீர் சீதளமென்று சொல்லி ஒதுக்கி சோடா வாடர் குடிக்கச்செய்கிறார்கள். அம்மைநோயில் எரிச்சல் குத்தலே அதிகமென்பது அவர்களுக்குத் தெரியாது. எரிச்சலைத் தணிக்க வேப்பிலையை அரைத்து பூசி குளிரச்செய்வதின் கருத்து குளிர்ச்சி செய்வதேயாகும். மஞ்சள் சேர்ப்பதால் நுண்ணுயிர்கள் சேருவதில்லை மரணம், உஷ்ணத்தால் நேருமே ஒழிய குளிர்ச்சியால் நேராது. உஷ்ணம் பிரிக்கும்; குளிர் சேர்க்கும். ஆழ்கருத்தறிந்து சாளக்கிராம பூஜைசெய்து துளசி தீர்த்தம் உண்டு பசி வந்த பின் உண்பவர்களையே உத்தம வைத்தியர்களாக எண்ணுவது தமிழ் நாட்டு பண்டைய வழக்கம் ஆகையால் அக்குற்றவர் கொடுக்கும் தைர்யசக்தி ஆவாஹன தீர்த்தம் துளசியை நோயாளிகளுக்கு கொடுப்பார்கள். இதனால் நீங்காதநோய் பூமண்டலத்திலில்லையென்று உறுதி கூறலாம்.

* * *

செயிண்ட் லூயி என்னும் நகரில் ஜான் புக்காரோ என்பவர் ஒரு சிறு பிடில் செய்திருக்கிறாராம். அதன் நீளம் $2\frac{1}{2}$ அங்குலம். பெரிய பிடில்களில் வாசிப்பதுபோல் அதிலும் சங்கீதம் நன்றாக வாசிக்க முடியுமாம்.

# உபாத்திமைச் சங்கங்கள்

(என். வெங்கடரமணன் சேலம்)

குளித்தலையி லின்றும் ஒரு நண்பர் "உபாத்திமைச் சங்கங்கள் அவசியமா? பாடக் குறிப்பு எழுதுவதன் அவசியமென்ன?" என்று நமது "ஆரம்பக் கல்வி" பத்திராசிரியருக்குச் சில வினாக்கள் எழுதி விடுத்துள்ளார். அவற்றில் முதல் வினாவுக்கு விடை கூறும் முகத்தால் உபாத்திமைச் சங்கங்களைப் பற்றி இக்கட்டுரையிற் சிறிதாராய்வாம்.

உபாத்திமைச் சங்கங்கள் யாவை?

பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் அரிய தொண்டினை மேற்கொண்டுள்ள ஆசிரியர்கள் பலர் ஒன்று கூடி ஏற்படுத்துஞ் சங்கங்களே உபாத்திமைச் சங்கங்கள் எனப்படும். இக்காலக் கல்வி முறைத் திட்டத்தின்படி (எலிமெண்டரி ஸ்கூல்) ஆரம்பாசிரியர்கள், (ஹைஸ்கூல்) நடுத்தரப் பாடசாலை ஆசிரியர்கள், [காலேஜ்] உயர்தரக் கலாசாலை யாசிரியர்கள் என ஆசிரியர்கள் முத்திறத்தனராயுளர். அவர்களில் ஆரம்பாசிரியர்களைப் பற்றியே பேசுவோம். ஆங்காங்கே கல்வி யிலாகா அதிகாரிகளின் முயற்சியால் ஒவ்வொரு பிர்க்கா தலைநகரிலும் ஒவ்வொரு சென்டர் உபாத்திமைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அச்சங்கத்தில் அந்த பிர்க்காவிலுள்ள கிராமங்களின் ஆசிரியர்கள் அனைவரும் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் மாதந்தோறும் ஒரு முறை குறிப்பிட்ட இடத்தில் ஒன்று கூடி, 'சங்கத்தை நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஆசிரியர்கள் தவறாமல் ஆஜராக வேண்டுமென்று அதிகாரிகள் உத்திரவிட்டிருக்கின்றனர். இவ்வித சென்டர் உபாத்திமைச் சங்கங்களல்லாமல் ஆசிரியர்கள் தன் சுய முயற்சியால் ஆங்காங்கே தாலூக்கா சங்கங்களென்றும், ஜில்லா சங்கங்களென்றும் சில விடங்களில் ஸ்தாபித்திருப்பதோடு, சென்னையில் மாகாண ஆசியர்கள் சங்கமொன்றும் கண்டிருக்கின்றனர். இச்சங்கங்களில் ஆரம்பாசிரியர்களும், அவர்களிடத்து அபிமானம் படைத்த பிறரும் அங்கத்தினராகலாம். இவை யல்லாமல் சொந்தத்தில் ஆரம்பப் பாடசாலைகளை வைத்து நடத்தும் [மிஷனல்லாத] ஆசிரிய மானேஜர்களுக்கெனவும், ஆசிரிய ரல்லாத தனிப்பட்ட பாடசாலை மானேஜர்களுக்கெனவும் சங்கங்கள் தோன்றியுழைத்து வருகின்றன.

சங்கங்கள் அவசியமா?

மேலே குறித்தவாறு தோன்றியுள்ள உபாத்திமைச் சங்கங்கள் பலவும் தந்தொழிலின் முன்னேற்றத்திற்கான விஷயங்களை யாராய்ந்து வரவும், அவ்வப்போது ஆசிரியர்களுக்கும், பாடசாலைகளுக்கும் நேருங் குறைகளைக் கவனித்து அவற்றை நீக்கிக் கொள்வதற்கான முயற்சிகள் செய்யவும், ஆசிரியர்களிடையில் கூட்டுறவையேற்படுத்தவும், ஆசிரியர்களின் கல்வி யறிவை மேன்மேலும் விருத்திசெய்து வரவும் உழைத்து வருகின்றன. இக்காலத்திலேயே யன்றி எக்காலத்திலும் சங்கங்களே எக்காரியத்தையும் சாதிக்க வல்லனவாம். தனி மனிதர்களால் செய்து முடிக்கப் பெறாத எத்தனையோ காரியங்கள் பலபேர் ஒன்று கூடிய சங்கங்களால் சாதிக்கப்பட்டிருக்கின்றன. முற்காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் மொழி வளர்ச்சிக்கென மதுரையம்பதியில் ஏற்பட்டிருந்த முச் சங்கங்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தற்போதும் அரசியல் சுதந்தரத்தைப் பெறவேண்டி ஏற்பட்டுள்ள "காங்கிரஸ்" போன்ற சங்கங்களை யல்லாது, நாட்டில் விவசாயிகள் சங்கம்,

வியாபாரிகள் சங்கம், தொழிலாளர் சங்கம், சமூகச் சங்கம், சமயச் சங்கம் என்பதுபோன்ற பல சபைகள் தோன்றி அவ்வத் துறையில் மேம்பாடுறக் கருதி யுழைத்து வருவதைக் காணலாம். இக்காலத்தில் ஒரு இயக்கம், அல்லது ஒரு சமூகம், அன்றி ஒரு தொழில் மேன்மையடைய வேண்டுமாயின் அதற்கென ஒரு சங்கமும், ஒரு பத்திரிகையும், தோன்ற வேண்டுவது அவசியமாகும். எனவே நம்நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் ஆரம்பாசிரியர்களுக்கும் அவர்கள் முன்னேற்றத்திற்குச் சங்கங்களும், பத்திரிகைகளும் இன்றியமையாதனவாகும். சங்கங்களின் காரணத்தால் ஆசிரியர்கள் பலர் அடிக்கடி ஒன்று கூடுவதால் ஒருவர்க் கொருவர் அன்பும், ஒற்றுமையும் எய்துவதோடு, கல்வி சம்மந்தமான ஐயப்பாடுகளை ஒருவருக் கொருவர் கலந்து தீர்த்துக் கொள்ளவும், போதனா முறையில் தங்கள் தங்கள் அனுபவங்களால் கண்ட நன்மை தீமைகளை வெளியிட்டுச் சீர்திருத்திக்கொள்ளவும், பலபேர் சிறு தொகையான உதவில் பொதுவில் பல புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாங்கிப் புத்தகாலய [லைப்ரரி] யமைத்து அனைவரும் அவற்றைப் படித்து அறிவை வளர்த்துக் கொள்ளவும், கலை—கைத்தொழில் சம்மந்தமான தங்கள் அனுபவங்களைக் காட்டி அவற்றைப் பரவச் செய்யவும், போதனா முறைக்கு ஏற்றதாயும், எளிதாயுமுள்ள பாட புத்தகங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக்கொள்ளவும், ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளாலும், வித்தியா இலாகா அதிகாரிகளாலும் ஆசிரியர்களுக்கு நேரும் கஷ்ட சுகங்களை ஆலோசித்துத் தீர்மானங்கள் செய்து மேலான அதிகாரிகளிடம் முறையிட்டுப் பரிகாரங்கள் தேடவும், ஆசிரியர்களிடையில் கூட்டுறவு ஸ்தாபனங்களை யேற்படுத்திக்கொண்டு சுலப வட்டிக்குப் பணஉதவி பெறவும், தமக்கு வேண்டிய உணவு, உடை, [பர்னிசர்கள்] உபகரணங்கள், புத்தகங்கள் முதலியவற்றைக் கூட்டுறவு முறையில் சகாய விலைக்கு வாங்கவும் 'இன்னோரன்ன பலநன்மைகளைத் தேடுவதற்கும் சாதனங்களேற்படுகின்றன. ஆகவே, உபாத்திமைச் சங்கங்கள் உபாத்தியாயர்களின் நன்மைக்கு மிகவும் அவசியமானவை யென்பதை யறியலாம். அப்படியே உபாத்தியாயர்களுக் கெனத் தனிப்பத்திரிகையும் தேவையாகும். இதைப்பற்றி மற்றொரு தனிக் கட்டுரையிற் பேசுவாம்

### சென்டர் பிர்க்கா சங்கங்கள்

இதுகாறுங் கூறியதில் உபாத்திமைச் சங்கம் அவசியமென்பதைக் கண்டோம். ஆனால் இன்று நாட்டில் தோன்றியுள்ள அச்சங்கங்கள் உண்மையில் அவ்வாறு பயன்பட்டு வருகின்றனவா என்பதைச் சிறிதாராய்வாம். வித்தியா இலாகா அதிகாரிகளால் ஆங்காங்கே ஒவ்வொரு ரெவினியூ பிர்க்காக்கள் தோறும் செண்டர் உபாத்திமைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த பிர்க்காவிலுள்ள கிராம ஆரம்ப ஆசிரியர்களனைவரும் அச்சங்கத்தில் அங்கத்தினராவர். அவர்கள் தவறாமல் ஒவ்வொரு மாதமும் நடக்கும் கூட்டத்திற்கு ஆஜராகவேண்டும். அனுமதி பெறாமல் அக்கூட்டத்திற்கு ஆஜராகாத மெம்பர்களைப்பற்றி அதிகாரிகள் கண்டிக்க உரிமைப் பெற்றிருக்கின்றனர். அவ்வாறு கூடும் செண்டர் சங்கங்களில் அநேகமாக வித்யா இலாகா அதிகாரிகளால் கொடுக்கப் பட்டுள்ள நிகழ்ச்சிக் குறிப்பின்படி காரியங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் சித்திரம் வரைதல், மாதிரிப் பாடம் நடத்தல், வியாசம் எழுதிப் படித்தல் முதலியன முக்கிய நிகழ்ச்சிகளாக விருக்கின்றன. ஆசிரியர்களுக்கு அதிகாரிகளால் அனுப்பப்படும் சுற்று உத்திரவுகளும், அறிக்கைகளும் இக்கூட்டங்களில் படித்துக் காட்டப்படுகின்றன. இச்சங்கங்களுக்கு அங்கத்தினரிடமிருந்து சொற்ப சந்தாத் தொகை வசூலிப்பதும் உண்டு. அத்தொகையைக் கொண்டு அறிவுதரும் நல்ல பத்திரிகைகளையும், புத்தகங்களையும் வாங்கி அங்கத்தினருக்கு எட்டச் செய்வது அதன் நோக்கமாகும்; மேலும் சங்கத்தின் சம்மந்தமான கடிதப்



போக்கு வரவு முதலிய சில்லறைச் செலவுகளும் நிர்வகிக்கப்படவேண்டும்.. ஆனால் இவ்வளவு நல்ல நோக்கங்களுடன் காணப்பட்டுள்ள உபாத்திமைச் சங்கங்கள் பெரும்பாலான ஆசிரியர்களின் அசிரத்தையால் அநேகமாக அங்கத்தினர்கள் சரிவர ஆஜராகாமலும், அவ்விதம் வந்து கூடின போதிலும் வீண் பேச்சுக் கூட்டங்களாகவும் நடைபெறுகின்றன வெனக் கூற நேர்ந்ததற்கு வருந்துகிறோம். இக்குறையைக் கவனித்து ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும். மேலும் சங்க நிகழ்ச்சிகளில் பிற நடவடிக்கைகளோடு அங்கத்தினரல்லாத அறிவாளிகளான உபந்நியாசகர்கள் ஒரு சிலரைக் கொண்டு இரண்டொரு உபந்நியாசங்களை ஒவ்வொரு மாதமும் ஏற்படுத்துவது அங்கத்தினருக்குக் கட்டடத்திற்கு ஆஜராக வேண்டுமென்ற உற்சாக மூட்டுவதாகும். அவ்வுபந்நியாசங்களும் கூடிய வரையில் மொழி, இலக்கியம், இலக்கணம், பூத பௌதிக சாஸ்திரம், விஞ்ஞானம், தொழில், பொருளாதாரம் போன்ற வற்றைச் சார்ந்ததாயிருத்தல் வேண்டும். அப்படிக்கன்றி சாதி-சமய சம்மந்தமான விஷயங்களைப் பேசி விவாதங்களுக் குள்ளாகலாகாது. மேலும் தற்கால உலகில் ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டிய இலௌகிகக் கல்வித் துறைகளில உபந்நியாசங்கள் பயன்தர வேண்டும். இவ்வித உபந்நியாசங்களுக்கு இதரபொது ஜனங்களையும், வயது முதிர்ந்த மாணவர்களையும் வரவழைப்பதும் மிகவும் பயன்தரும். இதனால் பொது ஜனங்களின் கூட்டுறவும், அபிமானமும் ஆசிரியர்களுக் கேற்படும். சித்திரமெழுதல், மாதிரிப்பாடம் நடத்தல், வியாசம் படித்தல் என்பவை [தற்போது நடைபெற்று வரும் மாதிரியில்] போதனாமுறைப் பாடசாலையினின்றும் இன்றைய பாடசாலை வரையில் தினந்தோறும் ஆசிபர்கள் பழகிச் சுவைத்த பழஞ் சரக்காகும். எனவே இவற்றை மாத்திரம் சங்க நடவடிக்கைகளாக ஏற்படுத்துவதில் உற்சாகமில்லை யென்பதையே குறிப்பிடுகிறோம். ஒரு சிலர் இப்பாடங்களைச் சங்கத்தில் நடத்தப் பெறவேண்டுவது அவசியமில்லை யென்கின்றனர். அஃது தவறாகும். ஏனெனில் போதனா முறைப் பாடசாலையிற் படித்த மாத்திரத்திலேயே போதனா முறையில் முழுப் பயிற்சி ஏற்பட்டு விடுகிறதில்லை. "ஒரு ஆசிரியர் ஆயுள் முழுதும் ஒரு மாணவராகவேயிருக்க வேண்டும்" என்று ஒரு பெரியார் கூறியிருக்கின்றார். அதன்படி ஆசிரியர்கள் பாடம் நடத்தல் முதலியவற்றில் மேன்மேலும் அனுபவ மெய்த வேண்டுவ தவசியமாதலால் சங்கங்களில் மாதிரிப் பாடம் முதலியவற்றை அவசியம் நடத்த வேண்டுவதே. இதுவன்றி ஒவ்வொரு செண்டர் உபாத்திமைச் சங்கத்திலும் தவறாமல் ஒரு புத்தகாலய மேற்படுத்த வேண்டும் அதில் அறிவு தரும் நல்ல நூல்களையும், பத்திரிகைகளையும் சேமித்து வைக்கவேண்டும். அவ்வாறு புத்தகாலயத்தில் தமிழில் எங்கெந்த புத்தகங்களைச் சேகரித்து வைக்கலாமென்பதைப் பற்றிச் சமீபத்தில் சென்னைப் புத்தகாலயச் சங்கத்தார் வெளியிட்டுள்ள அறிக்கைகள் பெரிதும் பயன்படும். தேவையானவர்கள் ஷெ சங்கக் காரியதரிசியின் பெயரால் "சர்வ கலாசாலை ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம். சங்கம் ஒன்றிருந்தால் அதற்கெனப் புத்தகாலயமொன்றிருக்க வேண்டுமென்பதை யாவருங் கவனிக்க வேண்டும். அப்புத்தகங்களை அங்கத்தினராகிய ஆசிரியர்களும், அவர்கள் மூலம் பிற பொது ஜனங்களும் பெற்று வாசிப்பதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யவேண்டும். கூடுமானால் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள புத்தகங்களை ஒரு பெட்டியிலமைத்து ஒவ்வொரு கிராம ஆசிரியரிடமு மளித்து, அவற்றைத் ஒரு மாத காலம் தமது கிராமத்தில் பொது ஜனங்களுக்குப் பயன் படுத்தி மீண்டும் அடுத்த மாதக் கூட்டத்தில் அவற்றை ஆஜர்படுத்தி, வேறு புத்தகங்களைப் பெற்றுச் செல்லச் செய்யலாம். புத்தகாலயங்களுக் கெனவே பிரத்தியேகமாக துரைத்தனத்தார் கொடுக்க ஏற்பட்டுள்ள [கிராண்ட்] [illegible] பொருளையும் இச்சங்கப்

190348

புத்தகாலயங்கள் பெற முயல வேண்டும். சென்டர் உபாத்திமைச் சங்கங்களின் மாதாந்தரக் கூட்டங்களை மாதந்தோறும் ஒவ்வொரு கிராமப் பாடசாலையிலாக மாற்றிக் கூட்டிவருவதும் விசேஷமான பலன் தருவதாகும். அதனால் ஒவ்வொரு ஆசிரியருக்கும் பிற பாடசாலைகளின் அமைப்பும், நோயையும், உபகரணச் சேமிப்புகளும், பிற குணங்களும் அறிமுகமாவதற்கிடமுண்டு. அக் கூட்டக்காலங்களில் அக்கிராம வாசிகளையும் ஆஜராகச் செய்து, அவர்களுடன் கலந்து கொள்வது பெரும் பயனளிக்க வல்லதாம். அதுவே பெற்றோரின் ஒற்றுழைப்பைப் பெறும் வழியுமாம். கூடுமானால் அப்பாடசாலைப் பிள்ளைகளையும் ஆஜர் படுத்தி அவர்களில் தக்காரைக் கொண்டு நடித்தல், படித்தல், பாடுதல் முதலியவற்றில் திறமையைக் காட்டச் செய்து உற்சாகப் படுத்தலாம்.

### சங்கங்களின் தொடர்ப்பு

மேலே கூறியவாறு நடத்தப்பெறும் சென்டர் சங்கங்கள் பல கூட்டி ஆண்டுக் கொரு முறை அல்லது இருமுறை தாலூகா சங்கங்களை நடத்தவேண்டும். அவ்வாறே ஜில்லாவிலுள்ள ஆசிரியர்கள் அனைவருங்கூடி ஆண்டுக்கொரு முறை ஜில்லா மகாநாடுகளை நடத்த வேண்டும். அம்மகா நாட்டில் அந்த ஜில்லாவிலுள்ள எல்லாச் சங்கங்களின் சுருக்கமான [ரிபோர்டுகள்] அறிக்கைகள் சேர்த்து வெளியிடப்படவேண்டும் அம்மகாநாடுகளில் போதனாமுறைத் தொழில் வளர்ச்சிக்கான உயரிய உபந்நியாசங்கள் புரிவிக்கவேண்டும். ஆசிரியர்களின் குறைகளை நீக்குவதற்கான தீர்மானங்கள் ஆராயப்பட வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் வித்யா இலாகா அதிகாரிகளையும், ஸ்தல ஸ்தாபன சபைகளின் அங்கத்தினரையும், பிற கல்வியபிமானிகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறே மாகாண ஆசிரியர் மகா சபைகளையும் முறைப்படி கூட்டுவிக்கவேண்டும். இவ்வித நன் நோக்கங்களைச் சாதிக்கும்படி ஆசிரியர்களை வித்யா இலாகா அதிகாரிகள் ஆங்காங்கே தூண்டி வரவேண்டும். ஆங்காங்கே நடைபெறும் உபாத்திமைச் சங்க நடவடிக்கைகளை அவ்வப்போது பிற பத்திரிகைகளில் வெளியிடுவதோடு தவறாமல் ஆசியர்களின் சொந்தப் பத்திரிகையாகிய இவ் "ஆரம்பக் கல்வி"யிலும் பிரசுரித்துவரவேண்டும். இதுபோன்ற பல நன்மைகளை விளைவிக்க வல்ல உபாத்திமைச் சங்கங்கள் ஆசிரியர்களின் நன்மைக்கு அவசியமே யாகும்.

துளசி:—கொலை செய்யப்பட்ட உடலை துளசி புதரில் மறைத்து வைத்ததாகவும் அநேக நாட்கள் அழுகாமல் இருந்த தாகவும் சமாசார பத்திரிகையில் வெளிவந்ததை படித்திருக்கிறோம். துளசிக்கீரை சரீரத்தை அழுக ஒட்டாமல் செய்கிறதும் தவிர இரத்தத்தில் கபம் சேர வொட்டாமல் செய்வதால் நீண்ட கால வாழ்வுக்கும் காரண மாகிறது. சிசுக்களின் கபநோய்களில் துளசி ரசம் கொடுத்து ஆயிரக்கணக்கான சிசுக்கள் பிழைத்திருக்கின்றன. தினம் இரண்டு தரங்கள் துளசி உண்பவர்களில் யாராவது நோய் உண்டான வருண்டா? முக்கியமாய் அம்மை நோய் உண்டான வருண்டா? துளசி, இரத்தத்தை சுத்தியாக வைப்பதால் மூளையையும் சுத்தியாக வைக்கிற தென்பது மிகையாகுமா? துளசி யுண்ணும் மாணவர்கள் பரீக்ஷையில் தவறிய துண்டா? தவறியவர்கள் இதைச் செய்து பார்க்கக் கோருகிறோம்.

### இளநீர்

அம்மை நோய்களில் பசிவரும் வரையில் உணவு கொடுப்பதில்லை இளநீர் கொடுப்பது வழக்கம். இக்காலத்திய டாக்டர்கள் இதன் பெருமையை அறியாததால் பண்டையரை மதிப்பதில்லை இளநீர் சீதளமென்று நம்புகிறார்கள். ஆரஞ்சிரசத்தைகொடுக்கிறார்கள். கொடிய சிட்ரிக்ஆசிட் உள்ள இரசத்தை குடிப்பது பரிதாபம். இளநீரின் குணம் வெகு உத்தமமாகையால் தேவதைகளின் அபிஷேகத்திற்கு உபயோகப்பட்டு வருகிறது:

# நீரும் ஒரு உபாத்தியாயா ?

## காலத்தின் கோலம்

(சாமி ஆறுமுகனார், கோபால சமுத்திரம்)

இராஜா மகன் இராஜா, மந்திரிமகன் மந்திரி என்ற கொள்கை மக்கள் மனத்தில் பதிந்திருந்த காலம்வரை உபாத்தியாயர் வேலை என்றால் ஒரு மதிப்புதான்; பெரிய கௌரவந்தான்; சிலாக்கியமான வேலைதான்; பாக்கியமான சம்பத்துதான். ஆனால் ஜனநாயக ஆட்சி, குடியரசியல் கிளர்ச்சி, சுயேச்சையில் மகிழ்ச்சி முதலிய புதிய அரசியல், அரசியல் போராட்டங்கள் கிளம்பும்போது "போக்கத்தவன் போலீஸ்; நாதியத்தவன் நார்மல் ஸ்கூல்" என்னும் புது பழமொழிபோலப் புறப்படலாயிற்று. அதிலும், வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடும் பொழுது எல்லோரும் அநேகமாய்ப் பல தொழிலிலும் நுழைய முயன்றும் கிட்டாவிட்டால் உபாத்திமைத் தொழிலையே தஞ்சமென்று சரணமடைகின்றனர். போதனா முறைப் பயிற்சிக்கே பிரவேசிக்கப் பெருமுயற்சி செய்கின்றனர். ஆகவே உபாத்தியாயர் வேலைக்கும் ஒரு பெரிய 'கிராக்கி' [சிரமமானதொரு காரியமாக] ஏற்பட வாரம்பிக்கிறது.

ஆனாலும் கனவிலும் நினையாத அலட்சியமாய் நினைத்திருந்த உபாத்தியாயர் வேலையாவது கிடைக்கட்டும் என்று முயன்று ட்ரெய்னிங் ஸ்கூலில் படித்துவிட்ட எனது நண்பர்களிற் பலரை எதிர்பாராதபடி சந்தித்துவிட்டால் ஆச்சரியமாயிருக்கிறது. அவரது வேலையைப்பற்றிக் குசலம் வினவும்பொழுது தூக்கி வாரிப்போட்டாற் போலிருக்கிறது. நீரும் ஒரு உபாத்தியாயரா? என்று அதிசயப்படவேண்டியதிருக்கிறது. வேறு வேலைகளில் பிரயத்தனஞ் செய்துகொண்டிருந்தபோதும், பள்ளியில் பயிலும் மாணவராயிருந்தபோதும், ஆசிரியர்வேலையை—உபாத்திமைத் தொழிலை ஏளனஞ்செய்தவர்களிற் பலரும், கேலிபண்ணியவர்களிற் பலரும், நகைபுரிந்தவர்களிற் பலரும் புதிதாய் உபாத்தியாயர் வேலைக்கே திண்டாடுவதைக் கண்டால் மனம் சகிக்கவில்லை.

பெரிய வீட்டுப் பிள்ளைகளிலிருந்து வயிற்றுச் சோற்றுக்குத் தாளம் போடுகிறவர்கள் வரை தற்காலத்தில் உபாத்தியாயர் வேலையை விரும்பிப்பெறப் பிரியப்படுகின்றனர். சிபாரிசுக் கடிதங்களை போர்டுதலைவர்களுக்கும், பள்ளிக்கூட மானேஜர்களுக்கும் காட்டியவண்ணமிருக்கின்றனர். பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களையும் எங்காவது வேலைவாங்கிக் கொடுக்கும்படி தொந்திரவு செய்கின்றனர். அப்படியிருந்தும் போதனாமுறைப் பாடசாலைப் கட்குத் திரள் திரளாய் அப்ளிகேஷன் [விண்ணப்பப்பத்திரங்கள்) அனுப்பியவண்ணமிருக்கின்றனர். இவர்களுடைய கூட்டப் பெருக்கினால் உண்மையான மானேஜருடைய தம்பிக்கோ அல்லது படித்ததும் வேலை போட்டுக் கொடுக்கக் காத்திருக்கும் நண்பருக்கோ, உரவினருக்கோ, கூட அனுமதி உத்திரவு கிடைப்பதில்லை என்பது வருந்தத்தக்கது! இவ்வாறெல்லாம் மாறுகின்றது காலத்தின் கோலத்து லொன்று போலும்! இதனால் நான் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களைக் குறைகூறவிரும்பவில்லை. நமது நாட்டிலே உபாத்தியாயர் வேலைக்குக் கூடக் குட்டிக் கரணம் போட்டாலும் கிடைக்கக் கஷ்டப்படுகிறதே என்று தான் வருத்தப்படவேண்டிய திருக்கிறது.

உபாத்தியாயர் வேலைக்கும் கஷ்டமடையும் படி செய்வதற்கு இரண்டு காரணங்களை முதன்மையாகக் கூறலாம். ஒன்று வேலையில்லாத் திண்டாட்டத்தால் பெருந் தொகையான எண்ணங்களின் வருகை. மற்றொன்று பிள்ளைகளின் பெற்றோர் படிப்பிலே தமது பிள்ளைகளைக் கற்பித்துவைக்க விரும்பாமை முதற் காரணம். பெரும்பான்மையாய் உயர்தரக்கல்லூரி மாணவர்கள் மிகுந்த இடங்களிலும், இரண்டாம் காரணம். கிராமாந்தரங்களிலும், கண்கூடாய்க் காணக்கூடும்.

ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமிகள் பட்டி, கிராமங்களிலும் சிறுபான்மை நகர்களிலும் பெற்றோரால் துள்ளித்திரிகின்ற காலத்தில் துடுக்கடக்கிப் பள்ளிக்கனுப்பிவைக்கப் பெறுமல் திரிகின்றனர். காரணம் பெற்றோருக்குப் படிப்பிக்கக் கவனஞ் செலுத்தாமையே. இதை அறிவுறுத்திப் பிள்ளைகளை அனுப்பிவைக்கும்படி தாய் தந்தையரை வேண்டினால் அவர்கள் உபாத்தியாயரைக் கேவலமாக நினைக்கின்றனர். அல்லது அவரது சுயமரியாதையைக் கொஞ்சம் இலேசாக மதிக்கின்றனர். ஆகவே பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது'போலப் பிள்ளைகள் சேர்க்க விரும்பிப் பெற்றோரைக் கேட்டுக் கொள்ளச் சென்ற ஆசிரியர் தமது சுயமரியாதையைக் கொஞ்சம் இலேசாக இழந்தவராய் வெற்றி பெற்றும், பெறுமலும் திரும்புகிறார். அதிலும் பல பாடசாலைகளுள்ள ஒரு கிராமத்தில் போட்டா போட்டி உபாத்தியாயர்கள் இருந்துவிட்டால் ஒற்றுமை குன்றிவிடுகிறது. ஆசிரியர்கள் செய்கையால் "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்ற மாதிரி பெற்றோர்கள் ஆசிரியன்மார்களைப் பொருட் படுத்துவதில்லை.

மானேஜ்மெண்ட் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் புதிய உபாத்தியாயர்களைச் சேர்ப்பதென்றால் அதிக கஷ்டப்படவேண்டியதிருக்கும். எல்லா மானேஜர்களும் அவ்வாறிருக்குமென்றும் கூறுவதற்கில்லை. சிலர் போதிய வரும்படியுடைய வராயிருப்பார்கள். சிலர் பொதுநிதி அல்லது க்ஷேமநிதி பெற்றவர்களாயிருக்கலாம். ஆனால் பெரும் பான்மையான எனக்குத் தெரிந்தவர்களெல்லாம் சிரமப்படுகிறவர்களாகத்தானிருக்கிறார்கள். இனம் இனத்தோடு சேரும் என்ற வாறுதானோ? அல்லது எல்லா நண்பர்களும் அப்படித்தானோ?

ஆகவே எனது உரையைச் சுருக்கி முடித்துவிட விரும்புகிறேன். உபாத்தியாயர்வேலை தேவை என்று விரும்புகிறவர்கள் முன்னுக்கு வரவேண்டுமானால், எல்லாச் சிறுவர் சிறுமியரும் படித்துவிடவேண்டுமானால், பிள்ளைகளின் போஷகர்கள் கண்டிப்பாகப் படிக்கும் வயதில் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பித் தீரவேண்டும். கட்டாயக் கல்வி, இலவசக்கல்வியுள்ள இதர பிரதேசங்களையும், இடங்களையும் போலவே யாண்டும் கட்டாயக் கல்விச் சட்டமும், இலவசக் கல்விச் சட்டமும் நிறைவேற வேண்டும். இந்த யோசனை புதிதானதன்று. பல நிபுணர்களும், அறிஞர்களும் பலமுறை கூறியதாகும். உபாத்தியாயர்களின் தொல்லையும் கவலையும் நீங்கும் காலம் எதுவோ? வேண்டும் திருவருட்டுணை 'தெய்வம் நின்று கேட்கும், அரசு அன்று கேட்கும்' என்பது முதுமொழி அரசாங்கம் இவ்விஷயத்தில் தீவிரமாயிறங்கி விட்டால் கூடிய விரைவில் உபாத்தியாயர்களின் போதனா சக்தியும், பிள்ளைகளின் படிப்பினூக்கமும், போதனாமுறைப் பயிற்சி பெற்றும் வேலை யில்லாமல் கஷ்டப்படுகிறவர்களின் தொல்லைகளைதலும், கைவந்து, மனமுவந்து, படிப்பின் செழுமை மலியக்கூடும். அடுத்து முயன்றாலும் ஆகும் நாளில் தான் எடுத்த கருமங்கள் முடியக்கூடும். அந்த ஆகும் நாள் எதுவோ? அது ஆண்டவனுக்குத்தான் தெரியும்!

அரசர் வாழ்க! அரசி வாழ்க!
அரசாங்கமும் ஆரம்பக் கல்வியும் நனகு
நன்கு வாழ்க! வாழ்க!

கடவுள் துணை.

## இராணிப்பேட்டை, போதனாமுறை பாடசாலை ஆசிரியர் திருவாளர் சி. வெங்கடேச அய்யர் பி. ஏ. எல். டி. அவர்களின்

# பிரிவு உபசார பத்திரம்.

அன்பர்களே!

பல்லார் பகை கோளலில் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர் கை விடல்.

என, திருத்தேவர் வாக்கின் வண்ணம் இப்பெரியார் சுமார் நாலைந்து திங்களாய் இப்பள்ளியில் தங்கி நமக்காக அரசாங்கத்தவர்களால் விதித்துள்ள பாடத்தோடு அமையாமல், விதி விலக்கு அறிவதற்கான சில நீதிமொழிகளையும், செவிக்கமுதாம்படி பல உதாரணக் கதைகளையும், மிகத் தெளிவாய்மென் மேலும் உணர்த்தி வந்த ஸ்ரீமான் எண்டகன்று போதலானது, அப்பெரியாருக்கும் மாணவர்களுக்கு வேண்டிய பாடதிட்டத்தை போதிய அளவு புகட்டாது போகின்றோம், என்கின்ற ஏக்கமொன்று இருக்குமென்றால் நமக்குரிய ஏக்கத்தை தாயகன்ற கன்றுகொள்ளும் ஏக்கத்திற்கு ஒப்பிடவேண்டும்.

"நன்றாங்கால் நல்ல வாக் காண்பவர்
அன்றாங்கால் அல்லல் படுவ தெவன்."

என்றும், பொய்யாமொழி புகட்டியுள்ளதால் அம்மொழிக்கு கட்டுப்படவாவது ஏக்கத்தை நீக்கி நாமெல்லாம் ஒழுங்காகி கீழ்கண்ட வண்ணம் சிறப்புரையும் வாழ்த்துரையும் கூறு நிற்போம்.

"மறை நான்குங்கற் றொழுகும் மாகு லத்திலுதித்துவந்த மாசினீரான்
முறையான்ற கல்வியறிவொழுக்கமதில் மேன்மேலும் நிறைந்த ஸ்ரீமான்
பிறையான்ற சடையானும் பிரமனுமா யென்னாளும் பேணியேத்தும்
விரையான்ற பொழில்கொண்ட வேங்கடேசன் திருநாமமேற்ற பூமான்

மாதயாவுடனே மாணவர்கள் பயிலும் வகையை
ஓதிவந்த வரும்மன்னர் பலருண்மை கதையை
பேதியாததினம் பேணிமுறையோடு பலரும்
போதகாசிரி யரகன்று போதல் முறையோ

எங்கேகி வாழ்ந்திடினு மெள்ளளவுங் குன்றாது குணமேலோங்கி
மங்காத பெருஞ்சுடர்போல் மானிலத்தில் பன்னலக்கு மாகிவாழ
சங்காடு பாற் கடலிற் றலையாலிற் கண்டுயிலும் தக்கமாயோன்
கொங்காரு மலர்திறத்தான் குரைகழலே கூறுவோமே.

7—8—33 }
இராணிப்பேட்டை.

இங்ஙனம்;
மாணவ உபாத்தியாயர்கள்
போதனாமுறை பாடசாலை

பொள்ளாச்சி தாலூக்கா கிராம ஆரம்ப ஆசிரிய சங்கத்தார்
ஷி ரேஞ்சு பாடசாலைகளின் டிப்டி இன்ஸ்பெக்டர்

ம–ள–ள–ஸ்ரீ

# சி. வெங்கடேச ஐயர், பி. எ. எல். டி.,

அவர்களுக்கு, வழங்கிய

## வரவேற்புப் பத்திரம்.

அன்புமிக்க ஐயா,

எங்கள் ரேஞ்சுக்கு தங்கள் வரவு நல்வரவாகுக. தங்களுக்கு உள்ள பல அலுவல்களுக்கிடையில் எங்கள் அழைப்பை மதித்து இன்று எங்கள் கூட்டத்திற்கு எழுந்தருளிய தங்களது பேரன்மைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே என்றபடி அறிவு, ஆற்றல்களிலும் அநுபவத்திலும் சிறந்த தங்களைத் தலைவராகப் பெற்றமை எங்கள் பாக்கியமேயாகும். தங்கள் தலைமையில் நாங்களும் எங்கள் சங்கமும் இனிப்பெற இருக்கும் எண்ணிலா நன்மைகளை எண்ணி எண்ணி மகிழ்வுறுகின்றோம்.

நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே என்பதற்கிணங்க சொற் சுவையும் பொருட் சுவையும் செறிந்த தங்களது விரிவுரைகளை மாதந்தோறும் எங்கள் கூட்டங்களில் கேட்க விழைகின்றோம்.

அறிவாற்றல்களில் குறைந்த அடியேங்களது குறைகள் பல இருக்கலாம். கிராமங்களில் எங்கள் தொழிலுக்கு இடையூறாயிருப்பவை கொஞ்சம் அல்லவென்பதும் தங்களுக்குத் தெரியாததல்ல. எனவே எங்களிடத்திற் காணும் குறைவுகளை அன்போடு பார்த்து அநுதாபத்தோடு நிறைவாக்குவீர்கள் என்று பெரிதும் நம்பியிருக்கின்றோம்.

தங்களோடு நெருங்கிப்பழக எங்களில் பெரும்பாலார்க்கு இன்னும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையாயினும் எங்களிடை தாங்கள் வந்த சிறிது காலத்திற்குள் ஆசியர்களாகிய எங்களிடத்து தங்களுக்குள்ள பேரன்பையும் எங்கள் உண்மை நிலையை உள்ளவாறறிந்து எங்களை முன்னேற்றத் தங்களுக்கிருக்கும் பேரவாவையும் அதற்காக தாங்கள் எடுத்துக்கொள்ளும் பெரு முயற்சியையும் இந்த சிறிது காலத்திலேயே ஒருவாறு கண்டுகொண்டோம். நாங்கள் நலம்பெறவும் எங்கள் தொழில் மேம்படவும் தாங்கள் செய்துவரும் முயற்சிகளில் நாங்களும் முழு மனத்துடன் எங்களாலியன்றவரை கலந்துழைக்கின்றோமென்று உறுதி கூறுகின்றோம். "நல்லாரோடிணங்கியிருப்பதுவும் நன்று."

எங்களிடை தங்களது தாளாண்மை இனிது நடைபெறவும், எங்கள் பால் தங்கள் கருணை மேன்மேலும் பெருகவும் தங்களிடத்து எங்கட்குள்ள அன்பு வளர்மதிபோல் சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

இங்ஙனம்,
தங்கள் அன்பிற்குரிய,
பொள்ளாச்சி தாலூக்கா
கிராம ஆரம்ப ஆசிரியர்கள்.

பொள்ளாச்சி,
17—9—33

# உ த ய கு மா ர ன்

(வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்)

## ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன் தொடர்ச்சி)

குணகரன்:—அரசே! நான் ஏதும் அறிந்திலேன். அஃதென்ன விஷயம்.

துஷ்டத்:—செட்டிகள் நாயகமென விளங்கும் வைரபணிச் செட்டியார்க்கு ஓர் புத்திரன் உளதாகவும், அவன் பெயர் சீவோதயனென்றும், அவன் வனப்பின் மாரனையும், கலையில் ஆதவனையும், விற்பயிர்ச்சியில் விஜயனையும் சங்கீத ஞானத்தில் கண்ணனையுமே யொப்புவனென்று சொல்லுகின்றார்கள். அஃது உண்மைதானா?

குணகரன்:—அண்ணலே! அஃதனைத்தும் மிகவும் உண்மையே. அவன் தம்போன்ற மன்னர்க்கு மகனாக வேண்டியது. ஏதோ தீவினையால் செட்டிமகனாகப் பிறந்தான். அப்பெற்றியனானபோதிலும் மன்னர்க்குரித்தான இலக்கண மெல்லாம் அவனிடத்து மலிந்து நிற்கின்றன. அவனை நம் சேவகத்துள் அமைத்துக்கொண்டால் மிகவும் நலமென வெண்ணுகின்றேன்.

துஷ்டத்—குணகர! அவ்வெண்ணம் மாத்திரம் என்றுங்கொள்ளாதே. அவன் நாமத்தைக் கேட்கும் போதே எங்குமிலாததோர் மனச்சலக்கம் நேருகின்றது. என்னை நம்பிய வீரவன்மன்னரை நான் எப்படிக்கொன்றேனோ அப்படி அச்சீவோதயனும் என்னுயிர்க்கு எமனாய் முடிந்தால் என்ன செய்வது? அவன் மிக்க பராக்கிரமசாலியென நமக்குத் தெரியவரின் அவனை எவ்விதமும் தொலைக்க முயலுவதே அறிவு. கையால் கிள்ளி எரிவதை விட்டுக் கோடாலியால் வெட்ட முயன்றால் என்னபயன்?

மதனன்:—(பிரவேசம்) மாதுல! அவ்வேடுவர்களை வெல்வது நம்மால் ஆவதில்லை. நான் அழைத்துச் சென்ற அவ்வளவு வீரர்களும் மாண்டொழிந்தனர். நான் இன்னும் சற்று நேரம் அங்கிருந்தால் நானும் எமபுரம் சேர்ந்தே இருப்பேன். உயிருடன் திரும்பிவந்தால் போதுமெனத் தப்பிப் பிழைத்துவந்தேன். தாங்களும் அவர்கள் மீது போதல்வேண்டாம். போயின் காரியம் பலியாது. நிகழ்ந்ததை எவரிடமும் மொழியாது வாளா விருத்தலே வீராண்மை. அப்பால் உமதிஷ்டம்.

துஷ்டத்:—நன்று. நன்று. குணகர! மிகவும் பராக்கிரம சாலியாகிய மதனனே அவ்வேடுவர்களால் தோல்வியடைந்தானென்றால் என்னசெய்வது.

குணகரன்:—வேந்தே! என் பேதை மதிக்கு ஏதும் எட்டிலது.

துஷ்டத்:—மந்திரி! அவ்வேடுவர் பூண்டை எவ்வாற்றாலும் ஒழித்தல் வேண்டும். அன்றேல் இல்லாத பொல்லாங்கு வந்துசேரும். யான் எண்ணுவதென்னவெனின் எத்தீரன் அவ்வேடுவர் கோட்டத்தையடக்கி என் கோநிரையை மீட்டுக்கொண்டு வருகின்றானோ அப்பராக்கிரம வீரனுக்கு என் புத்திரி காந்திமதியைக் கொடுப்பன். இது செய்தியை நம்மூர் அறிய முரசறைவியும்.

குணகரன்:—தேவரீர் விருப்பின்படியே. (என்று சொல்லிவிட்டு போய்விடுதல்)
துஷ்டத்தும்மனும் சபையைவிட்டு போய்விடுதல்.

## களம் 2.
## அங்கம் 2.

### துஷ்டத்தும்மன் தனி மண்டபம்.

செங்கமலம்:—நாதா! மதனன் கொள்ளையுற்ற நங்கோநிரையை மீட்டுவரச் சென்றவிடத்த வேடுவர்களால் மிகவும் வருத்தமுற்று நிரையை மீட்காது திரும்பிவிட்டனராம் தாங்கள் அவ்வேடுவர் தம்மை வென்று நங்கோ நிரையை எவர்மீட்டுவருகின்றனரோ அவர்க்கு நம் அருமைப் புதல்வியை காந்திமதியைக் கொடுப்பதாக முரசறை வித்திராம். அஃதென்ன உண்மைதானோ? நம் செல்வியை யாவர்க்கும் மணக்க மனமிருந்தபோதிலும் வேடுவர்க்கு அஞ்சி நின்றார்களென்றும் வணிகர் வீதிவாழ் வைரமணிச் செட்டி மைந்தன் சீவோதயன் தன்னுயிர்த்தோழனாகிய பதுமுகனுடன் யுத்தகோலங் கொண்டு சென்றிருப்பதாகவும், அவன் எப்படியும் நிரையை மீட்டுவந்து காந்திமதியை எப்படியும் மணப்பனென்றும் ஊரெங்கும் பேரொலியாய் இருக்கின்றது. அவனென்ன மதனனினும் சிறந்த தீரனோ.

துஷ்டத்:—யாவும் வாஸ்தவமே. செட்டிமகனைப் பற்றி யாவரும் அப்படியே சொல்லுகின்றார்கள் அவன் பெயரை சொல்லும் போதே என்னகத்தில ஓர் விதமான அச்சம் நிகழ்கின்றது. அதற்கென்ன காரணமோ அறியேன். ஓர் கால் அவன் கோநிரையை மீட்டுவரின் நம் செல்வியை அவனுக்குக் கொடுக்கவேண்டு மென்றும் என் மனஞ் சம்மதிக்கின்றது.

செங்கமலம்.—தனிக்கோலோச்சும் மன்னர் தம் நாயகமாக விருந்து ஓரிளங்காளைக்கோ அஞ்சுவது? ஓர் கால் அக்காளை கோநிரை மீட்டுவரினும் புதல்வியை எப்படிக் கொடுப்பீர்? கொடுத்துப்பின் வாங்கின் உலகம் நகுமன்றோ.

மதனன்:—[பிரவேசம்] மாதுல! சீவோதயனும் அவன் நண்பன் பதுமுகனும் வெற்றிமாலை புனைந்து கோநிரையை மீட்டுவந்திருக்கின்றனர்.

துஷ்டத்.—இருவருள் வெற்றிக் குறியுடையோன் யாவன்?

மதனன்:—அதுதான் இன்னும் தெரியவில்லை.

துஷ்டத்:—நல்ல திருக்கட்டும். எல்லாம் நாளைத்தெரியும். மதனா! நீ சீக்கிரம் சென்று திருமணத்திற்கு யாவும் சித்தம் செய்வாய்.

மதனன்:—அப்படியே சித்தம் செய்கிறேன் (செல்லுதல்.)

துஷ்டத்:—நாயகி! நீயும் சீக்கிரம் சென்று நம்புதல்விக்கு இது செய்தியை அறிவித்து, மெல்லியலை நாளை அலங்கரித்துக் குறித்த வேளையில் சபைக்கு அனுப்பிவை.

செங்கமலம்:—நாதா! நும் விருப்பின்படியே செய்கின்றேன். (செல்லுதல்)

துஷ்டத்:—தனியே (யோசித்தல்) நாம் இது காறும் ஏதுகவலையுமின்றி மிகவும் மகிழ்ச்சியாய் அரசு செலுத்திவந்தோம். இப்போது ஏதோ என் மனத்துள் காரண மற்றவோர் கலக்கம் நிகழ்கின்றது. ஓரிரண்டாண்டுள் செட்டிமகன் பட்டிமக்கள் நல்லெண்ணத்தைக் கொள்ளை கொண்டான். அவன் நம் நாட்டிருந்தால் எப்படியும் நமக்குக்கேடு நேரும். அவனை எப்படியாவது, தலைக்கவெண்ணினும் நம் தையலை யவனுக்கே கொடுத்தால் நம்மிடத்திலேதானேயே, அனர்த்தம் நேருகின்றது. இப்பாவத்திற்கென் செய்குவன். நாம் ஒன்றெண்ணின் தெய்வமொன்றெண்ணுகின்றது. எதும் தெய்வ எண்ணப்படி நடக்குமேயல்லாது நம்மெண்ணப்படி நடவாது. வீணில் வருந்துவதினென்னபயன். எதையும் நாளைப்பேர்ப்போம். சீக்கிரமே சென்று இனி நடப்பதைக் னிப்பம்.



## அங்கம் 1.
## களம் 3.

துஷ்டத்தும்மன் - செங்கமலம் - மதனன் - குணாகரர் முதலிய யாவரும் மணமண்டபத்தில் வந்திருப்பது.

பிராம்மணர்:—மன்னர் பெரும! யாவும் சித்தமாகவே இருக்கின்றது தாமும் சமயத்தில் வந்துவிட்டீர்கள். இன்னும் மாப்பிள்ளையைக் காணோமே. என்காரணம்.

துஷ்டத்:—மதனா! இன்னும் ஏன் வரவில்லை. செய்தியை விபரமாய் அவர்களுக்குத் தெரிவித்தனையோ.

மதனன்:—கூறியவாங்கே தெரிவித்தேன். காரணம் ஏதோ அறியேன் குறித்த வேளைக்குள் அவர்கள் வராதொழியினும் மிகவும் நன்மையே. பாவம் ஓர் அணங்கை இருவர் கொண்டு செல்லுவதிலும் ஒருவன் நானே கொள்ளுகின்றேன். காந்திமதி வயதடைந்தபின்னர் அவள் வனப்பை முன்னரே யான் கண்டிருந்தால் செட்டிமகனுக்கும், பட்டி மகனுக்கும் விட்டு இளித்தவாயனாய் நிற்பேனோ. நேற்றைப்போதன்றோ அவளைக் கண்டேன்.

துஷ்டத்:—என்னடா! மூடா! நீ நிற்கு மிடமின்னதென வறியாது ஏதேதோ வீணில் பிதற்றுகின்றாய்.

மதனன்:—நான் மூடனானதினாலன்றோ ஏமாந்து நின்றேன். காரியக் காரனாகவிருந்தால் காந்திமதியைச் சாந்தி செய்திருப்பனன்றோ. இக் கழுதைமகள் அக்காள்தான் தன் மகளை எனக்குக் கொடுக்க நினைத்தனளா. நான் புசிக்கின்ற கனியை மற்றவர் புசிக்க மனந் தரிப்பேனோ. நடப்பதைப் பார்ப்போம்.

சீவோதயனும், பதுமுகனும் மணமண்டபப் பிரவேசம்.

துஷ்டத்:—வாரும், வாரும், ஏது இவ்வளவு நேரம் நும் வீரதீரத்திற்கு மிகவும் மெச்சினேன். நும்மில் யாவர் நிரையை மீட்டுவந்தவர்.

சீவோதயன்:—மன்ன! வேடுவர் குழாத்தை யொழித்தவன் நானேயெனினும். கோநிரையை மீட்டுவந்தவன் பதுமுகனே. ஆனதுபற்றி நும் புதல்வியாரை மணக்க அவனே உரியன்.

துஷ்டத்:—நன்று, நன்று, நிரையை மீட்டுவந்தவீரன் பதுமுகனேயாதல்பற்றி அவனே என் புதல்விக்கு மணாளன். செங்கமலம்! சீக்கிரமே சென்று செய்தியை நங்குமாரிக்குத் தெரிவித்து அழைத்துவருதி. (செங்கமலம் செல்லுதல்) [காந்திமதியும் செங்கமலமும் மணமண்டபப் பிரவேசம்] மங்கையர் நல்லாய்! வேடுவர் கொள்ளைகொண்ட கோநிரையை மீட்டுவந்தது பதுமுகனே யாதல் பற்றி என்வார்த்தைப்படி நீ அவ்வீரனுக்கு மாலையிட்டு என்றும் சுகமாக வாழ்வாய். காந்திமதி பதுமுகனையும் சீவோதயனையும் பொது நோக்காய் எதிர்நோக்கிப் பதுமுகனுக்கு மாலையிடுதல். மண்டபத்திலிருந்த யாவரும் வாழ்த்துதல்.

## அங்கம் 2. களம் 1.

### சயிந்தை சயனக் கிருகம்.

சயிந்தை சயனத்திருத்தலும் ஓர் கனவு கண்டு, காமவேதனை கொண்டு. மலர் மஞ்சத்தினின்றும் எழுந்துட்கார்ந்து,

சயிந்தை:—ஆ! நாதா! நும்மை எப்படிக்காண்பேன். பூவும் மணமும் போலும் சொல்லும் பொருளும் போலும், ஆகமும் உயிரும் போலும், கரும்பும் சுவையும்போலும், எள்ளும் எண்ணெயும் போலும் என்னுடன் ஒற்றுமைப் பட்டிருந்த நும்மைப் பாழுமிவ்விருவிழிகளும், வண்டுபோலும், புலவர் போலும், யமன்போலும், ஆலை போலும், செக்குபோலும் அல்லவோ நின்று விழித்து நும்மைத்தூரத்தியது. இதற்கென் செய்கேன். ஆ! நாதா! இன்னும் என் முன் அருவத்தோடு நின்று என்

காமக்கனலை மூள்வித்தலழகோ. உருவத்தோடு என் முன்தோன்றி என்னைத் தழுவியணைத்து ஓர் முத்த மீந்தால் எவ்வளவு சந்தோஷம் பெறுவேன். நமது மனமென்ன கல்லோ, இரும்போ, அல்லது பெரும் பாறைதானோ. நமது அருமை முத்தத்தை எனக்குக் கொடுக்க விருப்ப மில்லையேனும், என்னைத் தேற்றுவதற்கான வோர் இன் மொழியேனும் உரைத்தல் குற்றமோ.

தோழி:—அடிதங்காய், ஏது நம் அரசி சிந்தை அயருகின்றது. மையல் கொடிது கொடிது.

சயிந்தை:—அடிதோழி ! நினக்கு எப்பொழுதும் என்னைக்கண்டால் இகழ்ச்சியா. ஏனடி என்னை இப்படி வருத்துகின்றீர்கள்.

தோழி:—பொன்னே ! உக்கிரவர்மனின் றமின்னே ! இப்படி யெல்லாம் வருந்துதல் நம்போன்ற கன்னியர்க்கு நேரிதன்று. யாம் நும்மை இகழ்ந்ததில்லை. நமக்குற்ற குறையைக் கூறின் எம்மாலான உபசாரம்புரிவம்.

சயிந்தை:—அடிதோழி ! நீங்கள் காமாக்கினியின் கொடுமையை அறிந்தவர்கள் அல்லீர். சிவன் உமையைப் பிரிந்த காலத்துக் கங்கையைத் தரித்தும் அக்காமாக்கினி நெற்றிக்கண்ணைய் வெடித்ததல்லவோ.? காமவின்பத்தை நுகர்ந்த மாதர்கள் அவர் தம் நாயகர் இறந்தபோது காமாக்கினிக்கு பயந்தன்றோ தீபாக்கினிப்புகுதுகின்றனர். அப்படியாயின் எப்படியான் காமாக்கினிக்கு ஆற்றுவன்.

தோழி:—அம்மே ! மிக்க சந்தோஷத்தோடு உறங்கச் சென்ற நீர் இவ்வண்ணம் மனங்கலங்குதல் எமக்கு மிக்க துன்பத்தை விளைவிக்கின்றது. இது மட்டும் இவண் ஏது ஆடவரும் வந்திலரே. கலங்குதற்குக் காரணம் என்ன ? அம்மம்ம அதுவேண்டா.

சயிந்தை:—அடிதோழி ! நன்று கூறினாய். நான் வருந்துவதும் நமக்குத் துன்பம் விளைவித்ததாயின் மலர்ப்பூவணையென வில்வேள் வாளியணைக்கிடத்துதல் அன்பின் தன்மையோ. சிறுமிகாள் நீங்கள் பரிகசிப்பதற்கேற்ற விதமன்றோ நம் துணைக்கு இளந்தென்றலும் வளர்மதியமும் வந்தன. நெடுந்திசைத் தென்றல் இச்சிறு சாளரம்புக்கு என்னைச் சுட்டெரிப்பது தமியேனிழைத்த வல்வினையின் கொடுமைதானோ. அல்லது தென்திசைத் தேவர் மூவர்வாழ் விடமிருந்து எழுதலின் தன்மையோ. என்செய்கேன் ஆ ! பாழுமிக்கவலை மதியுமென்னை வாட்டுகின்றதே. குன்றமிட்டுக் கடல் கடைந்து அமுதெடுத்த காலத்தாயினும் அழிந்திலதே. முனிக்கரசர் கடலையுண்ட காலத்து அவர் உதரம்புக்கழிந்திலதே. முக்கண்படைத்த முதல்வர்தானும் தேவர் தம்மைக் காக்குமாறு விடத்தை உண்டவிதம், எம்போன்ற மடவாரைத் தேற்றுமாறு விழுங்கிலையே. குன்றமெடுத்துக் கடல் விடுத்தமந்திக் கூட்டம் பொதிகை வெற்பையும் வீழ்த்திலையே. ஆ! காமம் கொடிது கொடிது. அம்மம்ம கொடிது கொடிது. [தலைசாய்ந் தெழுந்து] அடிதோழி ! என்ன மடமை இளந்தென்றலும் வளர்மதியமும் மிகவும் நல்லதே. அவை பொருந்தினோர்க்கு இன்பம் பயப்பிக்கின்றன. தணந்தார்க்குத் துன்பம் பயப்பிப்பதற்குக் காரணம் காமனது கொடுமையே. ஆ! அவனென்ன கொடியன். கண்பட்டு மண்படானாயின் இன்னும் என்ன கொடுமை விளைவியான். அக்கொடியன் உருவமற்றும் மீண்டும் அருவம் பெற்றெழுந்தது மாதர்களிழைத்த தீவினையின் சம்மதந்தானோ அடிதோழி ! என்னாவி இனி ஒரு போதும் நில்லாது. அகலச்சென்று நில்லும் [என்று சொல்லிக் கொண்டே மலரணையிற் சாய்தல்]

1-வது தோழி:—நம் அரசியார் பலவிதமாய் ஏதேதோ புகன்று மெய்மறந்து மஞ்சம் சார்ந்தார். நாமினி சும்மாவிருந்து போதுவிடிந்ததும் இனி நடப்பதற்கான காரியங்களைக்கவனிப்பம்.

2-வது தோழி:—என்னடி, அடிதங்காய் ! இது கொடுமை. நம்மர சிளங்குமரிக்கு உயிருண்டோ இல்லையோ பார்ப்பாய்.

1-வது தோழி:—வீணில் ஏன் கலங்குகின்றாய். உயிரிருக்கின்றது. இதோபார் வாய்துடிக்கின்றது கண்கள் இமைக்கின்றன. நீ எதுக்கும் கவலைப்படல் வேண்டா. நீ சற்று அகலவிருந்து சாமரம்வீசி வருவாய். மற்றவெல்லாம் நாளைப்போது கவனிப்பம்.

[தொடரும்]

# சென்னை கவர்ன்மெண்ட்

## ஆரம்பக் கல்வியைக் குறித்த ஆக்ட்

(முன் தொடர்ச்சி)

2. அந்த அலுவல் அப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலத்துக்குள் செய்யப்படாவிட்டால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - அதைச் செய்வதற்காக யாதொரு நபரை நியமிப்பதுமல்லாமல், அதைச் செய்வதற்கான செலவுத் தொகையைத் தாம் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள் ஜில்லா கல்விச் சபையார் அப்படிப்பட்ட நபருக்குக் கொடுக்க வேண்டுமென்று கட்டளை யிடலாம்.

3. ஷை செலவுத்தொகை அப்படி கொடுக்கப்படாவிட்டால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 28-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட நிதி யார் வசத்திலிருக்கிறதோ அந்த நபருக்கு, ஷை நிதியிலிருந்து வேறே எந்த செலவுகளுக்காகவும் தொகை கொடுப்பதற்கு முன் மேலேகண்ட செலவுத்தொகையைக் கொடுக்கும்படி கட்டளையிட்டு உத்திரவு செய்யலாம். அப்படிப்பட்ட நபர் - ஜில்லா கல்விச் சபையின் வரவுக்கணக்கிலிருக்கும் நிதியைக்கொண்டு எவ்வளவு சாத்தியமாயிருக்கிறதோ அவ்வளவுவரையில் ஷை உத்தரவின்படி நடக்கவேண்டும்.

*சபையைப் புனர் நிர்மாணம் செய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.*

23. ஜில்லா கல்விச் சபை இந்த ஆக்டின்படி அதன் அலுவல்களைச் சரிவர செய்யவில்லையென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு எந்த காலத்திலாயினும் தோற்றினால், அவர் - அப்படிப்பட்ட ஜில்லா கல்விச் சபையில் தெரிநதெடுக்கப்பட்டும் நியமிக்கப்பட்டுமுள்ள சகலமெம்பர்களும் தங்களுடைய ஸ்தானங்களைக் காலிசெய்யவேண்டுமென்றும், அந்த காலிஸ்தானங்களைத் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் விஷயத்தில் தெரிந்தெடுப்பதனாலும் நியமிக்கப்பட்ட மெம்பர்களின் விஷயத்தில் நியமிப்பதனாலும் பர்த்திசெய்யவேண்டும் அல்லது எல்லா காலஸ்தானங்களையும் நியமிப்பது மூலமாகவே பர்த்திசெய்யவேண்டும் என்றும் கட்டளையிடலாம்.

(3) ஜில்லா கல்விச் சபைகளின் அலுவல்கள்.

*சபையின் அலுவல்கள்.*

24. (1) அடியிற்கண்டவை ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் செய்யவேண்டிய அலுவல்களாகும்.

ஏ. சகல மூலாதார பாடசாலைகளையும், இத்தனை மூலாதார பாடசாலை இடங்களுக்காக இம்மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்பதையும் காட்டும் ஒரு ரெஜிஸ்டரைத் தயார் செய்து வைத்துவருவது;

பி. மூலாதாரக் கல்விக்காக இப்பொழுது செய்திருக்கிற ஏற்பாடு விஷயமாகவும் பாடசாலைக்குப் போகும் வயதுள்ள சகல குழந்தைகளும் மூலாதாரக் கல்வி பெறுவதற்கு அவசியமாய்ப் பின்னும் செய்யவேண்டிய ஏற்பாடு விஷயமாகவும் சபையார் ஒரு எஸ்டிமேட் [மதிப்பு திட்டம்] தயார்செய்வது சாத்தியமாயிருக்கும்பொருட்டு அவசியமாயிருக்கக் கூடிய பின்னும் சங்கதிகளை அட்டவணைப்படுத்துவதும், மேலேகண்டபடி அவசியமாயிருக்கக்கூடிய [ப்ளான்கள்] நக்ஷாக்கள் அல்லது (மாப்புகள்) படங்கள் தயார் செய்வதும் ;

சி. ஒவ்வொரு தாலூக்கா போர்ட் விஸ்தீர்ணத்திலும் முனிசிபல் விஸ்தீர்ணத்திலும் மூலாதாரக் கல்வியைப் பரவச்செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கல்வி சம்பந்தமான இதர ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களுடனும் கலந்து ஏற்பாடு செய்வது ;

டி. பணம் கிடைக்கக்கூடியபொழுது அப்படிப்பட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் உடன் சேர்க்கையாய் மூலாதார பாடசாலைகளை விஸ்தரிப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கல்வி சம்மந்தமான இதர ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களுடனும் கலந்து ஏற்பாடு செய்வது ;

இ. 41-வது பிரிவின் நிபந்தனைகளை அனுசரித்து மூலாதார பாடசாலைகளுக்கு அங்கீகார உத்தரவு கொடுப்பது ;

எப். தனி நபர்களின் சொந்த நிர்வாகத்திலிருக்கும் மூலாதார பாடசாலைகளின் சார்பில் க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவியசகாயத்துக்காக 42-வது பிரிவின்படி செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களைப்பற்றி ஆலோசித்து உத்தரவுகள் ஜாரிசெய்வது;

ஜி. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் இது விஷயமாய் சபையாரின் வசம் விட்டுவைக்கப்பட்ட நிதியிலிருந்து ஜாரி செய்யப்பட்ட சகல க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயத் தொகைகளையும் தனி நபர்களின் சொந்த நிர்வாகத்திலிருக்கும் மூலாதார பாடசாலைகளுக்கு பட்டுவாடா செய்வது ;

எச். ஜில்லாவில் மூலாதார பாடசாலை உபாத்தியாயர்களின் பயிற்சிக்காக ஏற்பாடு செய்துள்ளவையாய் அங்கீகார உத்தரவு பெற்றுள்ள சகல ஸ்தாபனங்களையும் பற்றிய ரெஜிஸ்டர் வைத்துவருவது ;

ஐ. ஜில்லாவிலுள்ள மூலாதார பாடசாலைகளில் அமர்ந்துள்ள பயிற்சியடைந்தும் ஸெர்டிபிகேட் பெற்றும் இருக்கும் சகல உபாத்தியாயர்களையுங் குறித்து ஒரு ரெஜிஸ்டரைத் தயார் செய்து வைத்துவருவது;

ஜெ. பயிற்சியடைந்தும் ஸெர்டிபிகேட் பெற்றுமுள்ள உபாத்தியாயர்கள் அதிகமாய்க் கிடைக்கும்படி செய்வதற்கு பிரேரேபனைகள் தயார் செய்து வித்தியா விசாரணைத் தலைவருக்கு அனுப்புவது;

கெ. மூலாதாரக் கல்வி சம்மந்தமாய் வித்தியா விசாரணைத் தலைவரால் சபையின் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்ட சகல விஷயங்களைக் குறித்தும் யோசனை சொல்வது.

2. (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட [எ] அடையாளமிட்ட பகுதியில் சொல்லப்பட்ட ரெஜிஸ்டரையும், [i] குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (பி) அடையாளமிட்ட பகுதியில் சொல்லப்பட்ட சங்கதிகளையும், ஜில்லா கல்விச் சபையின் அதிகார வரம்புக்குள் இருக்கும் ஒவ்வொரு தாலூகா போர்டுக்கும் முனிசிபல் விஸ்தீர்ணத்திற்கும் தனித்தனியாக முறையே வைத்துவரவும் அட்டவணைப்படுத்தவும் வேண்டும்.

*சொந்த மூலாதார பாடசாலைகளுக்குச் செய்யப்படும் திரவிய சகாயத்தைப்பற்றிய விவரங்களை சபையார் அனுப்பவேண்டுமென்பது.*

25. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் பிரதி ஸர்க்கார் வருஷத்திலும்:—

1. அதன் ஜில்லாவுக்காக [எ] அந்த வருஷத்துக்கு க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயத்தொகை ஜாரி செய்யப்பட்டிருக்கிற தனி நபர்களின் சொந்த நிர்வாகத்திலிருக்கும் மூலாதார பாடசாலைகளின் பெயர்களையும், [பி] அப்படிப்பட்ட ஒவ்வொரு பாடசாலைக்கும் ஜாரிசெய்யப்பட்டிருக்கும் திரவிய சகாயத்தின் அளவையும் காட்டும் ஒரு விவரக்குறிப்பை, வித்தியா விசாரணைத் தலைவர் கட்டளையிடக்கூடிய தேதிக்குள்ளாகவும் நமூனாப்படியும் தயார் செய்து அவருக்கு அனுப்பவேண்டும்; மேலும்,



2. அது - அதன் ஜில்லாவுக்குள் பாடசாலைகளுக்குப் பங்கிட்டுக்கொடுத்திருக்கும் க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயத் தொகைகளைக் காட்டும் ஒரு ரிபோர்ட்டை, வித்தியா விசாரணைத் தலைவர் கட்டளையிடக்கூடிய தேதிக்குள்ளாகவும் நமூனாப்படியும் அவருக்குச் சவுதரிக்கவேண்டும்.

*நிர்ணயிக்கப்பட்ட இதர ரிபோர்ட்டுகளை சபையார் சவுதரிக்கவேண்டுமென்பது.*

26. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - நிர்ணயிக்கப்படக்கூடிய பின்னும் ரிபோர்ட்டுகளையும் விவரக்குறிப்புகளையும் வித்தியா விசாரணைத் தலைவருக்கு அனுப்பவேண்டும்.

*சிப்பந்தியை அமர்த்திக் கொள்வது.*

27. இந்த ஆக்டினால் ஏற்படுத்தப்பட்ட அலுவல்களைச் சரிவரச் செய்வதற்காக ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் ஜாரிசெய்யப்படக்கூடிய சிப்பந்தியை அமர்த்திக் கொள்ளவேண்டும்.

4. நிதியும், பட்ஜெட்டும் [வரவு செலவு திட்டமும்], தணிக்கையும்.

*சபையின் நிதியின் என்னென்ன சேருமென்பது.*

28. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் ஒரு நிதியை வைத்துவரவேண்டும்; அதில் அடியிற்கண்ட தொகைகளை வரவு வைக்கவேண்டும்;

1. மூலதாரக் கல்விக்கு க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவியசகாயத் தொகைகள் கொடுப்பதற்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் கொடுக்கப்பட்ட சகல தொகைகளும் ;

2 ஆபிஸுக்காகவும் சிப்பந்திக்காகவும் பிடிக்கும் செலவுகளைக் கொடுக்கும் பொருட்டு ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்களால் கொடுக்கப்பட்ட சகல தொகைகளும்.

3. சபையாருக்குச் சொந்தமான அல்லது அவர்களால் நிர்வகிக்கப்பட்டுவருகிற எவையேனும் நிதியேற்பாடுகள் அல்லது இதர சொத்திலிருந்து கிடைக்கும் சகல வரும்படியும் ;

4. இந்த ஆக்டின் காரியங்களுக்காக சபையாரால் வரப்பெற்றுக்கொள்ளப்படக் கூடிய இதரமான சகல தொகைகளும்.

*நிதியை எவ்விடத்தில் கட்டிவைக்க வேண்டுமென்பதும் எப்படி அதிலிருந்து தொகைகள் வாங்கவேண்டுமென்பதும்.*

29. 1. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையின் நிதியையும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் கட்டளையிடக்கூடிய பாங்கியிலாவது ஸர்க்கார் கஜானாவிலாவது கட்டிவைக்கவேண்டும்.

2. ஜில்லா கல்விச் சபை செய்யும் சகல செலவுகளுக்காகவும் அந்த நிதியிலிருந்து தொகை செலுத்தவேண்டும்.

3. நிதியிலிருந்து தொகை கொடுக்கும்படி பிறப்பிக்கப்படும் சகல உத்திரவுகள் அல்லது செக்குகளிலும் ப்ரெஸிடென்டாவது அவருக்காக கையெழுத்து போடும்படி அவர் எழுத்துமூலமாய் அதிகாரம் கொடுக்கக்கூடிய வேறே நபராவது கையெழுத்து போடவேண்டும்.

*வரவைப்பற்றியும் செலவைப் பற்றியும் பட்ஜெட்டை சபையார் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டுமென்பது.*

30. [1] ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - பிரதி வருஷம் நவம்பர்  30-ம் தேதியன்றாவது அதற்கு முன்னாவது, அடுத்த பைனான்ஷியல் (அரசிறை) வருஷத்துக்காக வரவையும் செலவையும் பற்றிய ஒரு பட்ஜெட்டை நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனாப்படி தயார் செய்வது வித்தியாவிசாரணைத்தலைவர் மூலமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு அனுப்பவேண்டும்.

2. ஆலோசனைச் சபையிலுள்ள கவர்னரவர்கள் - அந்த பட்ஜெட் விஷயமாய் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவுகள் ஜாரி செய்யலாம்; மேலும், ஜில்லா கல்விச் சபையார் அந்த உத்தரவுகளை யெல்லாம் அமுலுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

சபையின் கணக்குகளைத் தணிக்கை செய்வது.

31. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையின் கணக்குகளும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் இது விஷயமாக நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தரால் பரீக்ஷிக்கப்பட்டு தணிக்கை செய்யப்படவேண்டும்; மேலும், ஜில்லா கல்விச் சபையார் - தணிக்கை ரிபோர்ட்டின்மேல் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் பிறப்பிக்கக்கூடிய எவையேனும் திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

70344

## 3-ம் அத்தியாயம்.

மூலாதாரக் கல்வி சம்மந்தமான நிதி.

1. அதன் அமைப்பும் மேல்விசாரணையும்.

மூலாதாரக் கல்வி சம்பந்தமான நிதி.

32. இந்த ஆக்ட் அமுலுக்குக் கொண்டு வரப்படும் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச அதிகாரசபைக்கும் மூலாதாரக் கல்வி சம்பந்தமான நிதியென்று ஒரு நிதி ஏற்படுத்தப்படும்; இதில்—

1. இந்த ஆக்டிற் கண்ட நிபந்தனைகளின்படி அந்த அதிகாரசபையாரின் அதிகாரவரம்புக்குள் விதித்து வசூல் செய்யப்படும் யாதொரு வரியிலிருந்து கிடைக்கும் தொகையும்,

2. மூலாதாரக் கல்வியின் பிரயோஜனத்துக்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் ஷை அதிகார சபையாருக்குக் கொடுக்கப்படும் சகல தொகைகளும்,

3. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி அந்த அதிகார சபையாரின் அதிகாரவரம்புக்குள் விதித்து வசூல்செய்யப்படும் சகல அபராதங்களும் தண்டத் தொகைகளும்,

4. மூலாதாரக் கல்வியின் பிரயோஜனத்துக்காக அப்படிப்பட்ட அதிகார சபையாரால் சொந்தமாய் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது நிர்வாகம் செய்யப்பட்டுவரும் யாதொரு நீதியேற்பாடு அல்லது வேறே சொத்திலிருந்து கிடைக்கும் சகல வரும்படியும்,

5. அப்படிப்பட்ட அதிகாரசபையாரால் நிர்வாகம் செய்யப்பட்டுவரும் மூலாதார பாடசாலைகளில் பாடசாலைச் சம்பளங்கள் எவையேனும் வசூலிக்கப்பட்டால் அப்படிப்பட்ட சகல சம்பளங்களும்,

6. இந்த ஆக்டின் காரியங்களுக்காக அப்படிப்பட்ட அதிகார சபையாரால் உதவி செய்யப்படும் அல்லது பெற்றுக்கொள்ளப்படும் இதரமான சகல தொகைகளும் வரவுவைக்கப்படும்.

கல்வி சம்பந்தமான நிதியை இன்ன இடத்தில் சட்டி வைத்திருக்கவேண்டு மென்பதும் அதிலிருந்து இன்ன விதமாய்ப் பணம் வாங்க வேண்டுமென்பதும்.

33. 1. 32-வது பிரிவின்படி ஏற்படுத்தப்படும் கல்வி சம்மந்தமான நிதியை ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் கட்டளையிடப்படக்கூடிய பாங்க் அல்லது ஸர்க்கார் கஜானாவில் கட்டிவைக்கவேண்டும்.

2 சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபையாரால் மூலாதாரக் கல்வி விஷயமாய் செலவு செய்யப்படும் சகல தொகைகளையும் ஷை நிதியிலிருந்து செலுத்தவேண்டும்.

(தொடரும்)


# எமது இனிய தமிழ்ப் பிரசுரங்கள்

## செந்தமிழ் வாசகம்

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் | 0 2 6 | ஆக்கியோர்: மணி திருநாவுக்கரசு முதலியார் |
| இரண்டாம் ,, | 0 3 0 | |
| மூன்றாம் ,, | 0 4 6 | |
| நான்காம் ,, | 0 5 6 | |
| ஐந்தாம் ,, | 0 6 6 | |

## பொற்காலக் கணிதம்

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் | 0 5 0 | டி. எஸ். இராகவையர் |
| இரண்டாம் ,, | 0 6 0 | |
| மூன்றாம் ,, | 0 8 0 | |
| நான்காம் ,, | 0 9 0 | |

## இந்திய சரித்திர தீபம்

| | | |
|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 5 0 | சி. வி. நாராயண அய்யர், எம். ஏ. எல். டி |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 6 0 | |

## சமூக வாசகம்

| | | |
|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 4 0 | ஆர். இராமையர், எம். ஏ. எல். டி. |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 5 0 | |

## நவீன சுகாதார வாசகங்கள்

| | | |
|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 4 0 | கே இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் ஐ எஸ். ஏ |
| 5-ம் வகுப்பு மூன்றாம் புத்தகம் | 0 5 0 | |

## அறநெறி விளக்கம்

| | | |
|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 5 0 | மணி. திருநாவுக்கரசு முதலியார் |
| 5-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 6 0 | |
| 6-ஆம் ,, மூன்றாம் புத்தகம் | 0 7 0 | |

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

| | | |
|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 [illegible] 0 | மணி திருஞானசம்மந்த முதலியார் |
| ,, அதிபத்த நாயனர் | 0 2 0 | |
| ,, ஏனதிநாத நாயனர் | 0 3 0 | |
| ,, நந்தனர் | 0 5 0 | |

## நீதி நூல்கள்

| | | |
|---|---|---|
| 2-ம் வகுப்பு உலகநீதி: உரையும் கதைக் குறிப்பும் | 0 4 0 | வா. வெங்கடராம சாஸ்திரிகள் |
| 3-ம் ,, கொன்றை வேந்தன்: ,, | 0 6 0 | |
| 4 ம் ,, நல்வழி: ,, | 0 6 0 | |
| 5-ம் ,, மூதுரை: ,, | 0 8 0 | |

நல்ல குழந்தை 3, 4-ம் வகுப்புகளுக்கு 0 3 0—மயிலை. சிவ. முத்து
பால கோபால லீலை 4, 5-ம் வகுப்புகளுக்கு 0 4 0—அ. சுப்பிரமண்ய பாரதி
திருக்கண்ணப்பன் 5-ம் வகுப்பு 0 5 0—மணி. திருநாவுக்கரசு முதலியார்.
இந்துபாக சாஸ்திரம் 0 8 0—பி. வி. ஜகதீச ஐய்யர்.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை

# ஸ்ரீ ரத்னம்

இந்த டானிக் காலை மாலை சாப்பிடுவதால் பெரும்பாடு, மலட்டுரோகம், வெட்டைச் சூடு நீர்பை கொதிப்பு, வீட்டு விலக்கல் கண்டதில் பெருச்சாளி செத்த துர்கந்த நாற்றம், பெலக்குறைவால் அடிவயற்றிலுள்ள நரம்பு விலகி பூராலக்கம் என்னும் பிளவியைப் போல் அடிக்கடி வயற்றுவலி உண்டாவது சோகை, பாண்டு காமாலை, சீதபேதி, மூலச்சூடு கைகால் ஓச்சல், அசதி, மயக்கம் இவைகள் யாவும் குணமடைவதுடன், கெர்ப புழுக்களை நசித்து புத்ர சந்தானம் உண்டாக நிலம் பரிசுத்தப் படுகிறதுடன், நல்ல தேஜஸும் அழகையும் சுறு சுறுப்பையும் உண்டாக்குகின்றது. கெர்பவதிகள் இதை ஆரம்பமுதல் பிரசவிக்கும் வரையில் சாப்பிடுவதால் குழந்தைகள் கரப்பான், வெட்டை ரோகம் அணுகாமல் சுசஜீவியாகவும் ஆரோக்கியமாகவும் புஷ்டியாகவுமிருக்கும். இந்த ஸ்ரீ ரத்னம் என்னும் டானிக் சாப்பிடும்விதம் மருந்துகளுடன் அனுப்புவோம். இம்மருந்துக்கு அநேக நற்சாக்ஷியுண்டு.




# சித் சுகாநந்த தில் குஷ் குளிகை

இக் குளிகையின் குணம் கிழவர்களும் வாலிபர்களாக வாழ்ந்து, சுகபோகத்தை அனுபவிக்க நிகரற்றது. முதல் இடுப்பு வலியைபோக்கும். நரம்புத் தளர்ச்சியை பிகுவுண்டாக்கும். இழந்த ஆண் தன்மையை மீண்டும் உயிர்பெறச் செய்யும் சரீர காந்தி அழகு சுறு சுறுப்பும், மூளைக்கும் இருதயத்திற்கும், நாடி நரம்புகள் யாவற்றிற்கும், நல்ல ரத்த ஓட்டத்தை பரவச் செய்யும். புத்தி கூர்மையை உண்டாக்கும். இந்திரியம் கெட்டிப்படும். காலை மாலையாக 20 நாள் விடாமல் 40 குளிகைகள் சாப்பிடவேண்டியது. அனுபவித்தை விரிவாய் எழுதக் கூடாதென விடுத்தோம். 20 நாள் சாப்பிடும் 40 குளிகை விலை ரூ. 7-8-0




ஜெனபோக, நிவாரண வைத்தியசாலை,

சித்த ஆயுர்வேத பண்டிட், எம். பாலசுந்தரம் பிள்ளை,

நெ. 24, ஜீல்ஸ் தெருவு ஜி. டி. மதராஸ்.


பி. வீ. தாசலன், அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு, நெ. 94-95 இல்லத்தில் ..., அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரகரிக்கப்பட்டது.



2. அது - அதன் ஜில்லாவுக்குள் பாடசாலைகளுக்குப் பங்கிட்டுக்கொடுத்திருக்கும் க்ராண்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயத் தொகைகளை காட்டும் ஒரு ரிபோர்ட்டை, வித்தியா விசாரணைத் தலைவர் கட்டளையிடக்கூடிய தேதிக்குள்ளாகவும் நமூனாப்படியும் அவருக்குச் சவுதரிக்கவேண்டும்.

*நிர்ணயிக்கப்பட்ட இதர ரிபோர்ட்டுகளை சபையார் சவுதரிக்கவேண்டுமென்பது.*

26. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - நிர்ணயிக்கப் படக்கூடிய பின்னும் ரிபோர்ட்டுகளையும் விவரக்குறிப்புகளையும் வித்தியா விசாரணைத் தலைவருக்கு அனுப்பவேண்டும்.

*சிப்பந்தியை அமர்த்திக் கொள்வது.*

27. இந்த ஆக்டினால் ஏற்படுத்தப்பட்ட அலுவல்களைச் சரிவரச் செய்வதற்காக ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் ஜாரிசெய்யப்படக்கூடிய சிப்பந்தியை அமர்த்திக் கொள்ளவேண்டும்.

## 4. நிதியும், பட்ஜெட்டும் [வரவு செலவு திட்டமும்], தணிக்கையும்.

*சபையின் நிதியின் என்னென்ன சேருமென்பது.*

28. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் ஒரு நிதியை வைத்துவரவேண்டும்; அதில் அடியிற்கண்ட தொகைகளை வரவு வைக்கவேண்டும்;

1. மூலதாரக் கல்விக்கு க்ராண்ட் இன் எய்ட் என்னும் திரவியசகாயத் தொகைகள் கொடுப்பதற்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் கொடுக்கப்பட்ட சகல தொகைகளும் ;

2 ஆபிஸுக்காகவும் சிப்பந்திக்காகவும் பிடிக்கும் செலவுகளைக் கொடுக்கும் பொருட்டு ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்களால் கொடுக்கப்பட்ட சகல தொகைகளும்.

3. சபையாருக்குச் சொந்தமான அல்லது அவர்களால் நிர்வகிக்கப்பட்டுவருகிற எவையேனும் நிதியேற்பாடுகள் அல்லது இதர சொத்திலிருந்து கிடைக்கும் சகல வரும்படியும் ;

4. இந்த ஆக்டின் காரியங்களுக்காக சபையாரால் வரப்பெற்றுக்கொள்ளப்படக் கூடிய இதரமான சகல தொகைகளும்.

*நிதியை எவ்விடத்தில் கட்டிவைக்க வேண்டுமென்பதும் எப்படி அதிலிருந்து தொகைகள் வாங்கவேண்டுமென்பதும்.*

29. 1. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையின் நிதியையும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் கட்டளையிடக்கூடிய பாங்கியிலாவது ஸர்க்கார் கஜானாவிலாவது கட்டி வைக்கவேண்டும்.

2. ஜில்லா கல்விச் சபை செய்யும் சகல செலவுகளுக்காகவும் அந்த நிதியிலிருந்து தொகை செலுத்தவேண்டும்.

3. நிதியிலிருந்து தொகை கொடுக்கும்படி பிறப்பிக்கப்படும் சகல உத்திரவுகள் அல்லது செக்குகளிலும் ப்ரெஸிடென்டாவது அவருக்காக கையெழுத்து போடும்படி அவர் எழுத்துமூலமாய் அதிகாரம் கொடுக்கக்கூடிய வேறே நபராவது கையெழுத்து போடவேண்டும்.

*வரவைப்பற்றியும் செலவைப் பற்றியும் பட்ஜெட்டை சபையார் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டுமென்பது.*

30. [1) ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - பிரதி வருஷம் நவம்பர்மீ 30-ம் தேதியன்றாவது அதற்கு முன்னாவது, அடுத்த பைனான்ஷியல் (அரசிறை) வருஷத்துக்காக வரவையும் செலவையும் பற்றிய ஒரு பட்ஜெட்டை நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனாப்படி தயார் செய்வது வித்தியாவிசாரணைத்தலைவர் மூலமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு அனுப்பவேண்டும்.

2. ஆலோசனைச் சபையிலுள்ள கவர்னரவர்கள் - அந்த பட்ஜெட் விஷயமாய் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவுகள் ஜாரி செய்யலாம்; மேலும், ஜில்லா கல்விச் சபையார் அந்த உத்தரவுகளை யெல்லாம் அமுலுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

சபையின் கணக்குகளைத் தணிக்கை செய்வது.

31. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையின் கணக்குகளும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் இது விஷயமாக நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தரால் பரீக்ஷிக்கப்பட்டு தணிக்கை செய்யப்படவேண்டும்; மேலும், ஜில்லா கல்விச் சபையார் - தணிக்கை ரிபோர்ட்டின்மேல் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் பிறப்பிக்கக்கூடிய எவையேனும் திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

170344

## 3-ம் அத்தியாயம்.

### மூலாதாரக் கல்வி சம்மந்தமான நிதி.

#### 1. அதன் அமைப்பும் மேல்விசாரணையும்.

மூலாதாரக் கல்வி சம்பந்தமான நிதி.

32. இந்த ஆக்ட் அமுலுக்குக் கொண்டு வரப்படும் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச அதிகாரசபைக்கும் மூலாதாரக் கல்வி சம்பந்தமான நிதியென்று ஒரு நிதி வகுப்படுத்தப்படும்; இதில்—

1. இந்த ஆக்டிற் கண்ட நிபந்தனைகளின்படி அந்த அதிகாரசபையாரின் அதிகாரவரம்புக்குள் விதித்து வசூல் செய்யப்படும் யாதொரு வரியிலிருந்து கிடைக்கும் தொகையும்,
2. மூலாதாரக் கல்வியின் பிரயோஜனத்துக்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் ஷை அதிகார சபையாருக்குக் கொடுக்கப்படும் சகல தொகைகளும்,
3. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி அந்த அதிகார சபையாரின் அதிகாரவரம்புக்குள் விதித்து வசூல்செய்யப்படும் சகல அபராதங்களும் தண்டத் தொகைகளும்,
4. மூலாதாரக் கல்வியின் பிரயோஜனத்துக்காக அப்படிப்பட்ட அதிகார சபையாரால் சொந்தமாய் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது நிர்வாகம் செய்யப்பட்டுவரும் யாதொரு நீதியேற்பாடு அல்லது வேறே சொத்திலிருந்து கிடைக்கும் சகல வரும்படியும்,
5. அப்படிப்பட்ட அதிகாரசபையாரால் நிர்வாகம் செய்யப்பட்டுவரும் மூலாதார பாடசாலைகளில் பாடசாலைச் சம்பளங்கள் எவையேனும் வசூலிக்கப்பட்டால் அப்படிப்பட்ட சகல சம்பளங்களும்,
6. இந்த ஆக்டின் காரியங்களுக்காக அப்படிப்பட்ட அதிகார சபையாரால் உதவி செய்யப்படும் அல்லது பெற்றுக்கொள்ளப்படும் இதரமான சகல தொகைகளும் வரவுவைக்கப்படும்.

கல்வி சம்பந்தமான நிதியை இன்ன இடத்தில் சட்டி வைத்திருக்கவேண்டுமென்பதும் அதிலிருந்து இன்ன விதமாய்ப் பணம் வாங்க வேண்டுமென்பதும்.

33. 1. 32-வது பிரிவின்படி ஏற்படுத்தப்படும் கல்வி சம்மந்தமான நிதியை ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் கட்டளையிடப்படக்கூடிய பாங்க் அல்லது ஸர்க்கார் கஜானாவில் கட்டிவைக்கவேண்டும்.

2 சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபையாரால் மூலாதாரக் கல்வி விஷயமாய் செலவு செய்யப்படும் சகல தொகைகளையும் ஷை நிதியிலிருந்து செலுத்தவேண்டும்.

(தொடரும்)